R. R no. 23/66
MADRAS RECORD OFFICE 4-FEB 1966

மேழிச்செல்வம்

விசுவாவசு ௵ - தை ௴

கோவை விவசாயக் கல்லூரி தினவிழா

4—1—66 அன்று கோயமுத்தூர், விவசாயக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் விடுதி புதிய கட்டிடத்தைமாநில முதல் அமைச்சர் திரு M. பக்தவத்சலம் திறந்து வைக்கிருர்கள்.

4—1—66 அன்று கோவை விவசாயக் கல்லூரியில் நடந்த 47-வது கல்லூரி தின விழாவில் விவசாயத்துறை நெறியாளர் திரு. கே. வி. ராமநாதன் வரவேற்புரை ஆற்றுகிருர். மேடையில் மாநில முதல் அமைச்சர், விவசாய அமைச்சர் முதலியோர் அமர்ந்துள்ளனர்.

69677

விவசாய விஸ்தரிப்பு பற்றிய விவசாய ஆராய்ச்சிப் பணிக்கான T. நடராஜ் சுழலும் கேடயமும், A. H. S. சர்மா சுழலும் கேடயமும் முதன் முறையாக 1964-ம் வருடம் முறையே திரு. A. ஜான்நைட், திரு. B. சீனிவாசராவ் ஆகியோரின் சிறந்த பணிக்காக அளிக்கப்பட்டது. 4—1—66 அன்று கோவை விவசாயக் கல்லூரியில் நடை பெற்ற 47-வது கல்லூரி தின விழாவில் மேற்படி கேடயங்களும் பதக்கமும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

உற்பத்தி பெருக

"விவசாய உற்பத்தியைப் பெருக்குவது என்பது தீவிர சாகுபடியேயாகும். ஒருபோக சாகுபடியுள்ள நிலங்களில் இருபோக சாகுபடியை மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே இருபோக சாகுபடி இருந்தால், மூன்றுவது போக சாகுபடிக்கு முயற்சிக்க வேண்டும். தகுந்த ஏற்பாட்டின் மூலம் இதைச் சாதிக்கலாம். முக்கிய பயிருடன், சாதாரணப் பயிர் எதையாவது சாகுபடி செய்யவும் நாம் முயற்சிக்க வேண்டும். வீடுகளில் காய்கறித் தோட்டங்கள் இருக்க வேண்டும். வாழை போன்றவைகளைப் பயிரிட வேண்டும்."

(10—10—65 வானொலி உரையில் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரி.)

கம்போஸ்ட் எருவை நிலங்களுக்கு எடுத்துச் செல்ல வாகன வசதிகள்.

கம்போஸ்ட் எருவை அதிக அளவில் உபயோகிக்க விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, கம்போஸ்ட் எரு தயார் செய்யும் எருக் கிடங்குகளிலிருந்து விவசாயிகளின் நிலங்களுக்கு எடுத்துச் செல்ல வாகன வசதிகளை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. நகராண்மைக் கழகங்கள், நகர பஞ்சாயத்துக்கள் போன்ற ஸ்தாபனங்களிலுள்ள டிரக்குகள் பிற வண்டிகளை கம்போஸ்ட் எரு ஏற்றிச் செல்வதற்கு விவசாயிகள் உபயோகித்துக் கொள்ள அரசாங்கம் ஆவன செய்து வருகிறது. நகராண்மைக் கழக அதிகாரிகள், நகர பஞ்சாயத்து அதிகாரிகள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா	ரூ. 3·00
தனிப் பிரதி	ரூ. 0·25
ஆண்டு மலர்	ரூ. 0·50

உள்ளுரை

	பக்கம்
திரு லால்பகதூர் சாஸ்திரி ..	5
சென்னை மாகாணப் பயிர்களுக்கு உரமிடல். ..	6
பேக்டீரியா கல்சரும் பசுந்தாளுரமும்	9
விவசாயச் செய்திக் கதிர் ..	10
அமெரிக்க விவசாயிகள் ..	11
கரும்புப் பயிரில் சோகை பரப்புதல் ..	14
கேள்வியும் பதிலும் ..	16
தீவிர உற்பத்தி திட்டத்தால் பருத்தி விளைச்சலில் விளைந்த முன்னேற்றம்.	18
வாழைப்பழத்தை அழுகாமல் பாதுகாக்கும் முறை.	19
தாவர நோய் மருந்தை உபயோகிக்கும் பொழுது தவருமல் கவனிக்க வேண்டிய விதிகள்.	20
வானொலிச் செய்திகள் ..	22
புலிக்குளம் ..	26
உங்கள் உயர்ரக பருத்திக்கு சான்றிதழ் பெற்று பயனடையுங்கள்.	27
கரும்புப் பயிரில் களைகளை ஒழிக்கும் முறைகள்.	28
1965-ம் ஆண்டு நவம்பர் மாதக் சுலை நிலை அறிக்கை.	29

விளம்பரங்கள்

டி. எ. 65/எப். 7 ..	4
டி. எ. 65/எப். 10 ..	8
பொட்டாஷ் ..	15
நீர்ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்.	18
ராஜா பண்ணைத் தோட்டம் ..	21
தமிழ்நாடு மின்சார குழு வேண்டுகோள்	[பின் அட்டை

நம் விவசாயிகளைப்பற்றி பெருமையடைகிறோம். அவர்கள்தான் நாட்டிற்கு உணவு அளிக்கின்றனர். சண்டையிடும் வீரர்களுக்கும், எல்லையைக் காத்திடும் ஜவான்களுக்கும், யந்திரத்தை சுழலச்செய்யும் தொழிலாளிகளுக்கும் அவர்கள்தான் உணவு அளிக்கின்றனர். உணவு இறக்குமதியைக் குறைத்தால், நம் அபிவிருத்திக்கும், பாதுகாப்புக்கும் அதிக நிதி வசதி கிடைக்கும், என்பதை நம் விவசாயிகள் தெரிந்துகொண்டு மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்கி சுயதேவையை பூர்த்தி செய்ய உதவுகின்றனர். நம் விவசாயிகள் நாட்டிற்காக உழைக்கிறார்கள். நாமும் நம் கடமையைச் செய்வோம்.

மாபெரும் நாடு
மாபெரும் மக்கள்

DA-65/F7

மேழிச்செல்வம்

சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 23 | விசுவாவசுஷூ தைமீ 1966—ஜனவரி-பிப்ரவரி | இதழ் 1

திரு லால்பகதூர் சாஸ்திரி

"ஜெய் ஜவான் ஜெய் கிசான்" என்ற வீர முழக்கத்தை நமக்களித்த வீரத் தலைவர் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நல்லுறவு ஏற்படுத்தும் வரலாற்றுப் புகழ்வாய்ந்த தாஷ்கண்ட் ஒப்பந்தத்தை உருவாக்கி விட்டு நாடு திரும்பும் வெற்றித் திருமகனை வரவேற்க நாமெல்லாம் காத்திருக்கும் நேரத்தில் "அவர் மறைந்துவிட்டார்" என்ற செய்தி நமக்குப் பேரிடியாகும்.

"தாஷ்கண்டிலிருந்து வெற்றியுடன் திரும்பும் வீரத் தலைவரை வரவேற்று, பொங்கல் திருநாளில் 'ஏர்முனை விழா' கொண்டாடி உணவு உற்பத்தியில் வெற்றி கண்டு அந்த வீரருக்குக் காணிக்கை யாக்குவோம்" என்றெல்லாம் எண்ணியிருந்த நமக்கு தலைவரையே இழந்து தவிக்கும் நிலை ஏற்பட்டது பெரும் துரதிர்ஷ்டம்தான்.

பதவியேற்ற 18 மாதங்களுக்குள் திரு. லால்பகதூர் சாஸ்திரி புரிந்த சாதனைகள் எத்தனை எத்தனையோ! இந்தக் குறுகிய காலத்துக்குள் அவர் நேருவின் சிறந்த வாரிசு என்பதை நிரூபித்து விட்டார்.

சிறிதும் படோடோபம் இல்லாமல், ஆடம்பரம் ஒரு சிறிதும் இல்லாமல், பதட்டம் என்பது என்ன வென்றே அறியாமல் சேவை செய்தவர் சாஸ்திரி. இந்தியாவின் பண்புக்கும், இந்தியரின் தன்னடக்கத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார் அவர். சிறந்த அரசியல் வாதிக்கு, விவேகமுள்ள ராஜதந்திரத்துக்கு, பொறுப்பான பிரதம மந்திரிக்குத் தேவையான சகல குணங்களும் சாஸ்திரியிடம் இருந்தன. அவர் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையிலும் இவற்றின் முத்திரைகளைக் காணலாம். எளிதில் உணர்ச்சி வசப்படாதவர், நிதானமாக சிந்திப்பவர். எங்கு துணிச்சல் தேவையோ, எங்கு தீரம் தேவையோ, எங்கு தளராத உறுதி தேவையோ, அங்கெல்லாம் அவற்றைப் போதிய அளவு அவர் காட்டத் தவறியதில்லை. இந்தக் குணாதிசயங்கள் அவரை ஒரு சிறந்த பிரதமராகத் திகழச் செய்தன.

தனது சிறப்பான நடவடிக்கைகளால் போர்முனையில் பெரும் வெற்றிகளை பெற்றுத் தந்த சாஸ்திரி ஏர் முனையிலும் சிறப்பான வெற்றிகாண விரும்பினர். உணவு உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட முயற்சிகள் எடுத்ததோடு, தற்போது நிலவும் பற்றுக்குறையைத் தவிர்க்கவும் முயற்சிகள் மேற்கொண்டார்.

"போர் முனையில் நாம் முழு பலத்துடன் போரிட்டோம். இப்போது நாம் சமாதானத்துக்காக முழு பலத்துடன் பாடுபட வேண்டும்" என்ற அவரின் கடைசி விருப்பத்திற்கேற்ப பாடுபட்டு போர் அற்ற உலகத்தை உருவாக்குவதுதான் சாஸ்திரிக்கு நாம் அமைக்கும் சிறந்த நினைவுச்சின்னமாக இருக்க முடியும்,

ஏர்முனையில் உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவு காணும் நன்னாளை ஏற்படுத்துவதே அவருக்கு நம் விவசாயிகள் செலுத்தும் சிறந்த காணிக்கையாகும்,

---

சென்னை மாகாணப் பயிர்களுக்கு உரமிடல்

வெ. சீனிவாசன், *தலைமை உர ஆய்வாளர்*, சென்னை.

இயற்கை உரங்கள், ரசாயன உரங்கள், கலப்பு உரங்கள் ஆகியவை பயிர்களுக்கு உரமிட உபயோகப்படுத்தப் படுகின்றன. சென்னை மாகாணத்தில், தொழு உரம், கம்போஸ்ட், தழை உரம் போன்றவை சாதாரண மாக எல்லோராலும் உபயோகப்படுத்தப்படும் கரிமப் பொருள் உரங்களாகும். அமோனியம் சல்பேட், யூரியா, அமோனியம் சல்பேட் நைட்ரேட், கால்ஷியம் அமோனியம் நைட்ரேட் ஆகியவை தழைச்சத்துள்ள ரசாயன உர வகை களாகும். ஆனால், அமோனியம் சல்பேட்டும் யூரியாவும் மற்ற ரசாயன உர வகைகளை விட விவசாயிகளால் பெரிதும் விரும்பப்படுகிறது. சமீப காலம் வரை, மணிச் சத்துள்ள உரவகையில் சூப்பர் பாஸ்பேட் மாத்திரமே உபயோகத்தில் இருந்து வந்தது. ஆனால் கடந்த இரண்டு வருஷங்களாக தழைச்சத்தும் மணிச்சத்தும் கொடுக்கக் கூடிய அமோனியம் பாஸ்பேட் என்ற உரம் அதிக அளவு உபயோகத்தில் இருந்து வருகிறது. சென்னை மாகாணத்தி லுள்ள மண்வகைகளில் பொதுவாக சாம்பல்சத்து குறைவு கிடையாது. இருந்தாலும், சில பயிர்களுக்கு, உதாரணமாக உருளைக்கிழங்கு, மரவள்ளி, மிளகாய் வாழை, திராட்சை ஆகிய பயிர்களுக்கு நல்ல விளைச்சலுக்கு சாம்பல்சத்து அவசியம் அளிக்க வேண்டும் இப்போழுது சாம்பல்சத்து உரமான மூரியேட் ஆஃப் பொட்டாஷ் சென்னை மாகா ணத்தில் உபயோகத்தில் இருந்து வருகிறது.

பயிர்களுக்கு தேவைப்படும் முக்கிய மூன்று உணவுப் பொருள்களாகிய தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவற்றை சரியான அளவிலும், தகுந்த உரமாகவும் பயிர்களுக்கு வைக்கவேண்டும். பலவகைப் பட்ட ரசாயன உரங்கள் வெவ்வேறு விகிதத்தில் பயிர் உணவுச்சத்துக்கள் கொண்டவையாக இருப்பதால் எல்லா விவசாயிகளுக்கும் குறிப்பிட்ட ரசாயன உரத்தை பயிருக்கு வேண்டிய அளவு உபயோகப்படுத்தத் தெரிவதில்லை. ஆகவே, சென்னை மாகாணத்தில் கலப்பு உரங்களை விவசாயிகள் பெரிதும் உபயோகிக்கின்றனர். இதனால் எல்லா பயிர் உணவுச் சத்துக்களையும் பயிர்களுக்கு அளிக்க முடிகிறது. தற் பொழுது சென்னை மாகாணத்தில் மொத்த தழைச்சத்தில் 40 சதவிகிதம் கலப்பு உரமாக விநியோகிக்கப்படுகிறது.

சென்னை மாகாணத்திலுள்ள விவசாயிகளுக்கு இயற்கை உரங்களுடன் ரசாயன உரங்களையும் உபயோகப்படுத்துமாறு சிபாரிசு செய்யப்படுகிறது. இதனால், மண்ணின் வளமும் தன்மையும் மாறுமல் பாதுகாக்கப்படுகிறது. இயற்கை உரத்தினின்று பயிர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் சிறிது காலம் கழித்தே கிடைப்பதாலும் அவ்வாறே, பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் பயிர் வளர்ச் சியின் ஆரம்பக் காலத்தில் தேவைப்படுவதாலும், எல்லா இயற்கை உரங்களும், பாஸ்பேட் பொட்டாஷ் ரசாயன உரங் களும் உழவிலேயே போட்டு விட வேண்டும்.

இருப்பினும், நீண்ட காலப் பயிர்களான வாழை, மர வள்ளி, கரும்பு, மிளகாய் பயிர்களுக்கு பாஸ்பேட், பொட் டாஷ் உரங்களை பயிர்களின் வளர்ச்சியில் வைக்கலாம். பலவகைப்பட்ட உரங்கள் இங்கு இருப்பதால், விவசாயிகள் எந்தெந்த உரத்தை எந்த அளவில் ஒவ்வொரு பயிருக்கும் வைக்க வேண்டும் என்பதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காக பின்வரும் அட்டவணையில் இயற்கை உரங்கள், ரசாயன உரங்கள், கலப்பு உரங்கள் போன்றவை ஒவ்வொரு பயிருக்கும் வைக்கப்பட வேண்டிய அளவு, இட வேண்டிய காலம் முதலிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பயிரின் பெயர்.	லாபம் தரக் கூடிய அளவு. (எக்கருக்கு கிலோவில்.)				கலப்பு உரம்.			மேலுரமாக இடுவதற்கு. (எக்கருக்கு கிலோவில்)				குறிப்பு.
	தழைச் சத்து.	மணிச் சத்து.	சாம்பல் சத்து.	இயற்கை உரம் (கம்போஸ்ட் அல்லது தொழு உரம், தழை உரம்).	எண்.	சத்துக்களின் அளவு.	போட வேண்டிய அளவு.	சூப்பர் (0·16)	கலப்பு உரம்.	அமோனியம் சல்பேட் அல்லது	யூரியா.	
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
நெல்												
எடிடீ. 27, கோ. 29 கோ. 25 ரகங்கள்.	27	18	18	2,250 தழை உரம்.	5	9-9-9	200	..	..	45 (அ)	20	..
பிற குறுகிய கால ரகங்கள்:												
1. பொட்டாஷ் குறைவான நிலங் களுக்கு.	14	14	7	2,250 தழை உரம்.	2	12-6-6	120	50	..	..	..	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
2. பொட்டாஷ் நிறைந்த நிலங்களுக்கு.	14	14	..	2,250 தழை உரம்.	1	14–7–0	100	40	..	..	..	..
சிறு தானியங்கள்												
இறவை சோளம், கம்பு	18	9	..	5,000 கம்போஸ்ட் அல்லது தொழு உரம்.	1	14–7–0	140	..	..	..	..	..
ராகி	18	9	9	5,000 கம்போஸ்ட் அல்லது தொழு உரம்.	2	12–6–6	150	..	..	..	..	..
மானவாரி	9	..	..	5,000 கம்போஸ்ட் அல்லது தொழு உரம்.	..	..	..	..	..	..	..	45 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா அடியுரமாக இடப்பட வேண்டும்.
கரும்பு— நெல்லிக்குப்பம் பகுதி.	120	14	14	4,500 தழை உரம் அல்லது 10,000 தொழு உரம்.	..	..	..	..	..	600	(அ) 250	..
				அல்லது	11	16–4–4	350	..	..	275	(அ) 150	இரு தடவைகளில்.
கரும்பு — புகளூர் பகுதி.	90	14	14	4,500 தழை உரம் அல்லது 10,000 தொழு உரம்.	..	..	..	..		450	(அ) 200	,,
				அல்லது	10	15–5–5	300	..	..	225	(அ) 100	இரு தடவைகளில்
பாண்டியராஜபுரம்	67·5	14	14	4,500 தழை உரம் அல்லது 10,000 தொழு உரம்.	..	..	..	..	..	350	(அ) 125	,,
				அல்லது	10	15–5–5	300	..	..	100	(அ) 15	,,
பருத்தி—இறவை	18	6	6	5,000	2	12–6–6	100	..	..	30	(அ) 12	,,
மானவாரி	9	..	..	5,000	..	..	..	..	..	..	..	45 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 20 கிலோ யூரியா அடியுரமாக இடப்பட வேண்டும்.
நிலக்கடலை—இறவை	7	14	21	5,000	7	4–8–12	175	..	..	..	..	..
மான வாரி	4·5	9	13·5	5,000	7	4–8–12	120	..	..	..	..	..
எள்	14	9	9	5,000	2	12–6–6	150	..	..	..	..	..

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	[11)	(12)	(13)
தென்னை	250	250 (மரத்திற்கு கிராம்களில்)	500	45 கிலோ தழை உரம் மரத்திற்கு.	3	6-6-12	*	..	..	..	..	..
உருளைக்கிழங்கு	36	90	45	..	4	6-12-6	700	..	..	..	..	..
வாழை — திருச்சிராப்பள்ளி பகுதி	120	30	150	5,000	8	12-4-12	500	50 கிலோ பொட்டாஷ்.	500	..	..	மேலுரம் இரு தடவைகளில் இடப்பட வேண்டும்.
தஞ்சாவூர்	120	30	120	5,000	8	12-4-12	500	..	500	..	..	,,
மிளகாய்	28	14	14	10,000	2	12-6-6	240	..	..	..	..	..
காய்கறி												
கீரை அல்லது இலை வகைக் காய்கறிகள்.	14	14	14	10,000	3	9-9-9	160	..	..	..	..	..
மற்றவை	14	28	28	10,000	6	5-10-10	300	..	..	..	..	..
புகையிலை — வர்ஜினியா ஹோசூர் பகுதி புகையிலை.	28	14	14	10,000	2	12-6-6	140	..	100	..	..	..
மற்றவகை புகையிலை.	28	14	..	10,000	1	14-7-0	100	..	100	..	..	..
மஞ்சள்	21	21	21	10,000	5	9-9-9	120	..	120	..	..	..
மரவள்ளிக் கிழங்கு	28	28	56	5,000	3	6-6-12	300	..	180	..	..	..
பழங்கள்												
திராட்சை	28	14	45	..	12	10-5-15	300	..	..	..	..	..
எலுமிச்சை அல்லது மா.	200	400 (மரத்திற்கு கிராம்களில்.)	400	5 கிலோ கம்போஸ்ட் அல்லது தொழு உரம்.	6	5-10-10	4 கிலோ மரம் ஒன்றுக்கு.	..	..	..	..	..

* 4 கிலோ காய்ப்பில் உள்ள மரம் ஒன்றுக்கு, 2 கிலோ 5 முதல் 10 வருட மரத்துக்கு, 1 கிலோ 5 வருடங்களுக்கு குறைந்த மரம் ஒன்றுக்கு.



" பேக்டீரியா கல்சரும் பசுந்தாளுரமும் "

(திரு. பி. எஸ். பழனிச்சாமி)

நான் பவானி தாலுக்கா, அம்மாபேட்டை வட்டாரத்தில் வசிக்கும ஓர் நடுத்தர விவசாயி, எனக்கு அம்மா பேட்டை கிராமத்தில் மேட்டூர் வாய்க்கால் பாசனத்தில் 13 எக்கர் நிலம் உண்டு. நான் ஒவ்வொரு வருடமும் பசுந்தாளுரப் பயிர் (கொளிஞ்சி, தக்கைபூண்டு) விதைத்து விவசாய இலாகாவுக்கும் விதை பெருக்கம் செய்து வருகிறேன்.

" பேக்டீரியா " உயிர் அணுக்கள் சேர்த்து விதைக்கப் பட்டுள்ள தக்கை பூண்டு பசுந்தாளுரப் பயிரின் தோற்றம்.

அம்மாபேட்டை பஞ்சாயத்து யூனியன் அலுவலக விவசாய இடங்கில் தக்கைபூண்டு விதை வாங்கச் சென்ற போது பசுந்தாளுர விதையுடன் அதிக அளவு தழைச் சத்து கொடுக்கக்கூடிய " பேக்டீரியா கல்சா " என்னும் நுண்ணுயிர் அணுக்கள் கலந்து விதைக்கு மாறு விவசாய அலுவலர் மூலம் தெரிவிக்கப்பட்டது. 10 குடுவை பேக்டீரியா கல்சர் வாங்கி தக்கைப்பூண்டு விதையுடன் 1965–ம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதியில் கலந்து விதைத்தேன்.

கோவை வயல் எரு அலுவலர் அதன் அவசியம் பற்றி தெளிவாக எடுத்துக் கூறினர். 1965–ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ந் தேதி ஆணையாளர் பார்வையிட்டபோது 9 அடி உயரம் வளர்ந்திருந்தது. பக்கத்திலுள்ள விவசாயி

உயிர் அணுக்கள் கலக்காமல் விதைக்கப்பட்டுள்ள பசுந்தாளுரப் பயிரின் தோற்றம்.

களும் பார்வையிட்டனர். பேக்டீரியா கல்சர் கலக்காமல் போட்ட பயிர் 5 அடி உயரமுள்ளது. பசுந்தழை பற்றுக் குறையை இதன் மூலம் பெருமளவு தவிர்ப்பதுடன் அதிக அளவு தழைச்சத்து பூமியில் சேர்த்து வைக்கப்படுகிறது. பசுந்தாளுர விதையில் பேக்டீரியா கல்சர் என்னும் நுண்ணுயிர் அணுக்கள் கலந்து விதைத்து அதிக மகசூல் அடைய கேட்டுக்கொள்ளுகிறேன்.

செழித்து வளர்ந்த கொளுஞ்சிப் பயிர்.

விவசாயச் செய்திக் கதிர்

(K. M. சுந்தரம், R. S. எர்னஸ்ட், விரிவினைப்பகுதி, விவசாயக் கல்லூரி, கோவை.)

இம்மாதக்குறிப்பில் கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியைத் தடுப்பதற்கான சரியான முறை பற்றியும், உருளைக் கிழங்குப் பயிரில் தோன்றும் இலைப்புள்ளி நோயைத் தடுப்பதற்கான புதிய பூசண மருந்து பற்றியும், வாழையில் பக்கக்கன்றுகள் வெட்டுதல் பற்றியும், வாழைக் குரிய பசுந்தாள் உரமிடுதல் பற்றியும், "இம்பூன்" என்ற அமெரிக்கத்தக்காளி பற்றியும் குறிப்புகள் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

கரும்புக் குருத்துப் பூச்சியைத் தடுக்க ஒரு சிறந்த தடுப்பு முறை.—குருத்துப் பூச்சி இளம் கரும்புப் பயிரைத் தாக்கி அதிக சேதமடையச் செய்வதை கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் நன்ருக அறிவார்கள். இந்தப் பூச்சி மிழ் நாட்டில் கரும்பு சாகுபடி செய்யப்படும் எல்லா இடங் களிலும் காணப்படுகிறது. முக்கியமாக வெயில் காலங் களில் அதாவது மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை ஒரு மாதப் பயிரில் தோன்றி நான்கு மாதப் பயிர் வரை காணப்படுகிறது. குருத்துப் பூச்சி கரும்புப் பயிருக்கு அதிகம் சேதம் விளைவிப்பதால் அதைத் தடுக்க வேண்டி யது மிகவும் அவசியம். ஆகையால் கரும்புக் குருத்துப் பூச்சியை அடியோடு அழிப்பதற்கு ஒரு வழி கண்டு பிடிக்க கடலூரில் உள்ள சர்க்கார் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் ஒரு பரிசோதனை நடத்தியதில் 5 ராத்தல் பி. எச். சி. 50 சதவிகிதக் கலவை 100 காலன் தண்ணீரில் கலந்து கரும்பு கரணைகள் மீது தெளித்தால் நீண்ட நாட்களுக்கு ஜூலை மாதம் மழை பெய்யும் வரை குருத்துப் பூச்சி தாக்குதலின்றி கட்டுப்படுத்துகிறது எனத்தெரிய வருகிறது. இம்முறையில இளம்பயிர் 30 முதல் 50 சத விகிதம் வரை சேதம் விளைவிக்கும் குருத்துப் பூச்சியி லிருந்து காப்பாற்றப் படுகிறது. இளம்பயிர் கவனிக்கப் படாவிட்டால் மேற்கண்ட சேதம் ஏற்பட ஏதுவாகிறது. "காமா" பி. எச். சி. மருந்தை ஒருமுறை நடவின் போது உபயோகிப்பதன் மூலம் மேற்கண்ட பெருத்த நஷ்டத்தைத் தடுக்கலாம். "காமா" பி. எச். சி. மருந்தை தண்ணீருடன் கலந்து, கரும்புக் கரணைகள் நடும் கூலியாட்களைக் கொண்டே சுலபமாகத் தெளிக்கலாம். மணற் பிரதேசங் களில் பி. எச். சி. மருந்தை படைசாலில் கரும்புக் கரணைகள் மீது நடவின்போது தெளிப்பதால் கரையானும் கரும்புப் பயிரைத் தாக்குவதில்லை எனத் தெரியவருகிறது. மேலும் மேற்கண்ட முறையைக் கையாளுவதால் பூச்சித் தாக்குதல் தடைப்பட்டு பயிர் வீரியமாக வளருகிறது. ஆகவே கரும்பின் மகசூலும் அதிகரிக்கப்படுகிறது.

டியூ-தர் (Du-Ter).—உருளைக்கிழங்கு இலைப்புள்ளி நோயைத் தடுக்க ஒரு புதிய பூசண மருந்து:—உருளைக் கிழங்கு செடியைத் தாக்கும் நோய்களில் மிகவும் முக்கிய மானது இலைப்புள்ளி நோய். இந்த நோய் சில இடங்களில் உருளைக்கிழங்குப் பயிர் முழுவதையுமே நாசமாக்கிவிடுகிறது. பயிர் வாடி இலைப்புள்ளிகள் தோன்றினல் அது நோயின் அறிகுறியாகும். நோய் முற்றிய பருவத்தில் செடி முழு வதும் சுருங்கிஜற் போலத் தோன்றும். உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு இது ஒரு பெருந்தொல்லையாக இருந்து வருகிறது. டியூ-தர் என்னும் ஒரு புதிய பூசண மருந்து, உருளைக்கிழங்குப் பயிரை இலைப்புள்ளி நோய்த் தாக்குதலி லிருந்து தடுக்க விவசாய இலாகாவால் மூன்று பரிசோதனை கள் செய்து பார்க்கப்பட்டதில் திருப்திகரமாக மூன்று முறை யும் வெற்றி அளித்தது. மேலும் டியூ-தர் தெளிக்கப்பட்ட பயிர், அது தெளிக்கப்படாத பயிர், மேலும் சாதாரண மாக உபயோகத்திலிருக்கும் டைதேன் மருந்து அல்லது போர்டோ கலவை முதலியவை தெளித்த பயிர்களைக் காட்டிலும் அதிக மகசூல் கிடைக்கச் செய்கிறது. டியூ-தர் மைசூர் பூச்சி மருந்துக் கம்பெனியாரால் தயார் செய்யப் படுகிறது.

வாழையில் பக்கக் கன்றுகள் வெட்டுதல் :—பொதுவாக வாழைமரம் பூவிட ஆரம்பித்தவுடன் பக்கக் கன்றுகளை வெட்டி விடுதல் வழக்கத்திலிருந்து வருகிறது. பல கன்று களை தாய்மரம் பூவிடும் வரை தாய் மரத்துடன் வளர விடுவதால் தாய் மரத்திற்கு கிடைக்கும் உணவுப்பொருளை பக்கக் கன்றுகள் பகிர்ந்து கொண்டு தாய்மரத்திற்கு போது மான உணவு கிடைக்க விடாமல் செய்கின்றன. அதனல் வாழைமரம், நன்ருக வளருவதில்லை. குலையும் உறுதி யாக இருப்பதில்லை. தாய்மரம் பூவிடுவதற்கு முன் பிருந்தே தாய் மரத்துடன் ஒரு பக்கக் கன்றை மட்டும் வளரவிடுவதால் மகசூல் அதிகரிப்பதாக, ஆடுதுறை வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்திய சோதனையி லிருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு பக்கக் கன்றைமட்டும் தாய் மரத்துடன் வளர விடுவதால் விரைவில் வாழை மரம் குலைவிட ஆரம்பிக்கிறது.

வாழைக்குப் பசுந்தாள் உரமிடுவதால் பெரிய வாழைக் குலை விரைவில் கிடைக்கும்:—நிரந்தர வாழைத் தோட்டங் களில் பசுந்தாள் உரமிடுதல் அதிகமாகப் பழக்கத்தில் இல்லை. வாழைத் தோட்டத்தில் பசுந்தாள் உரமிடுவதால் மகசூல் அதிகரிக்கிறதா என்று கண்டுபிடிக்க ஆடுதுறையில் உள்ள மத்திய வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் நடத்தப் பட்ட சோதனையில், சணப்பு இருந்த பாத்திகளில் உள்ள வாழை மரங்கள் மற்ற வாழை மரங்களைக் காட்டிலும் விரைவில் குலைவிட ஆரம்பித்தன. குலையின் எடையும் அதிகமாக இருந்தது. ஆகையால் வாழை மரங்களுக் கிடையில் சணப்பு விதை விதைத்து பயிர் வளர்ந்தவுடன் அங்கேயே அதை பிரட்டிவிடுதல் வாழைச் சாகுபடியில் கையாளவேண்டிய புதிய முறைகளில் ஒன்று.

முருங்கைக்கு உரமிடுங்கள்! மகசூல் பலமடங்கு அதிகரிக் கிறது.—நல்ல காய்கறி வகைகளில் ஒன்றுகிய முருங்கை

(13-ம் பக்கம் பார்க்கவும்)

அமெரிக்க விவசாயிகள் *

(திருமதி ஜெயா அருணாசலம்.)

சில நாட்களுக்கு முன்பு நம் நாட்டு விவசாயிகளின் சார்பாக அமெரிக்கா செல்லும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இரண்டு மாத காலம் அமெரிக்காவின் பல மாகாணங்களிலும் அந்த நாட்டு கிராமங்களிலும் சில நகர்ப் பகுதிகளிலும் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இவைதான்.

கிராமங்களை முக்கியமாக விவசாயத்தை பற்றி நான் குறிப்பிடுவதற்கு சில காரணங்கள் உள்ளன. இந்த நாட்டின் இன்றைய தேதியில் உணவுப் பிரச்னையைப் பொறுத்த வரையில் அவை நமக்கு சில உபயோகமான சிந்தனைகளை உணர்த்துகின்றன.

நூறு அல்லது நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க விவசாயிகளும் குதிரை பூட்டி ஏர் உழும் நிலையில்தான் இருந்தனர். ஆனால் இந்த ஒன்றரை நூற்றாண்டுக்குள் தமது தேவைக்கு மேல் இரண்டு அல்லது மூன்று மடங்கு உற்பத்தியைப் பெருக்கும் சாதனை 7 சதவீதம் விவசாய மக்களுக்கு எவ்வாறு முடிந்தது என்று ஆராய்ந்தால் அதன் நுட்பங்கள் நன்கு புரியும்.

ஆரம்ப நாட்களில் விவசாயத்தை வளர்ப்பதற்கு அதிகமான சலுகைகளை அரசாங்கமும் கொடுத்துவந்திருக்கின்றது. உள்நாட்டுச் சண்டை போன்ற போராட்டங்களில் பங்கு கொண்டவர்களுக்கு நிலத்தை தாராளமாக குறைந்த விலையில் கொடுத்தனர். தேசிய விஸ்தரிப்பு திட்டங்களும் விவசாயிகளின் தனிப்பட்ட பிரத்யேக அமைப்பு முறைகளும் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்து விவசாயத்தை வளர்ப்பதில் பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டன. தனிப்பட்ட விவசாயமன்றங்கள் பெரிய திறமைசாலிகளான விவசாயிகளைக் கொண்டவை. இந்த விவசாயிகள் புதிய முறை எதுவானாலும் அது கடும் விமர்சனத்திற்கு உரியதாய் இருந்தபோதிலும், அதனை முதன் முதலில் தமது பண்ணைகளில் முயன்று பார்ப்பதே அவர்களுடைய முக்கிய தொழில்.

அமெரிக்க மக்கள் வெவ்வேறு நாட்டிலிருந்து வாழ்க்கைக்கு வழி தேடி வந்தவர்கள். சுதந்திரத்தின் அடிப்படையில் வாழ விரும்பியவர்கள். புதிய நாட்டின் சூழ்நிலையும், பூர்வீக குடிகளும் இவர்களை வரவேற்கவில்லை. வெறுப்பும், விரோதமும், கடுமையும் கொந்தளித்துக் கொண்டிருந்த அந்த சூழ்நிலையில் எப்படியாவது நல்வாழ்வுக்கு அடிகோல வேண்டுமே என்ற ஆர்வமும் கவலையும் அவர்களிடம் இருந்தது. எனவே புதியவை என்று எதைச் சொன்ன போதிலும் உடனடியாக ஏற்றுக் கொள்ளும் மனோபக்குவம் இவர்களிடம் இருந்தது. இந்த எண்ணமும் முயற்சியுமே அவர்களின் யந்திர சாதனைகளுக்கும் விஞ்ஞான வளர்ச்சிக்கும் முதற்படி. அடுத்தபடியாக பெண்களுக்கும், குடும்பத்திலுள்ள பிறருக்கும் விவசாயத்தில் பங்கு கொள்ளவேண்டுமென்று அதற்கு ஏற்றவாறு சட்டங்கள் கொண்டு வந்தனர். 1862-ல் ''ஹோம்ஸ்டெட்'' (Homestead) சட்டம் குடும்ப விவசாயப் பண்ணைகளுக்கு இடமளித்தது. குறைந்த 160 ஏக்கர்கள் கொண்ட பண்ணைகள் எல்லாம் குடும்ப விவசாயப் பண்ணைகள். விவசாய குடும்பங்களிடையே திறமையும், ஊக்கமும் பெருகுவதற்கு ஆங்காங்கு விவசாயக் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டுமென்ற நோக்கத்துடன் மத்திய அரசாங்கம் ஒவ்வொரு மாகாணத்திலும் விவசாயத்திற்கும் மனை-பொருளாதாரத்திற்கும் ஆராய்ச்சி வசதிகள் கூடிய கல்லூரிகளை அமைத்தனர். ஏராளமான பொது நிலங்கள் இதற்கென மாகாணங்கள் தோறும் மத்திய அரசாங்கத்தால் மான்யமாக வழங்கப்பட்டது. எண்ணற்ற மாணவ, மாணவிகள் இந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார்கள். இந்தக் கல்லூரிகளில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் புதிய பூச்சி நாசினி, புதிய ரசாயன உரம் இன்னும் இந்த துறையில் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு ஆராய்ச்சிகள் முடிவற்று தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. இதன் விளைவுகளும் முடிவுகளும் விவசாய முன்னேற்றத்திற்கும், அன்றாடச் செயல்முறைகளுக்கும் பெரிதும் பயன்படுகின்றன. இந்த முடிவுகளை உடனுக்குடன் விவசாயிகளுக்கு நேரிடையாகவோ, சிறிய புத்தகங்கள் அல்லது ரேடியோ, டெலிவிஷன் மூலமாகவோ, விஸ்தரிப்புத் திட்டத்தின் முயற்சியினாலோ உடனுக்குடன் தெரிவிக்கப்படுகின்றன. இதுவே கல்வியின் சாதனையென நாம் வியக்கின்றோம்.

விஸ்தரிப்புத் திட்டங்களின் காரியாலயங்களிலும் அதிகப்படியான அதிகாரிகளும் சிப்பந்திகளும் இருப்பதாகத் தெரியவில்லை. நமது பஞ்சாயத்து யூனியன்களை ஒத்த 'கௌண்டீஸ்' (Counties) என்னும் பிரிவுகளே அங்கு காணப்படுகின்றன. குறைந்த எண்ணிக்கையில் நிறைந்த அளவில் நிறைவுபெறும் வேலை நடப்பது நமக்கு வியப்பாகத்தான் இருக்கின்றது. நிர்வாகம் நேர்மையாகவும் அமைதியாகவும் நடப்பதற்கு முக்கிய காரணம் மேற்படி அதிகாரிகளும் அவர்களுக்குகீழ் உள்ளவர்களும் மக்களின் நன்மையையே தமது குறிக்கோளாகக் கொண்டு பணிபுரிவதுடன் சாதாரண பொது மக்களிடையே தாங்களும் ஒருவராக நினைத்து மிகச் சரளமாக பழகுகின்றனர். காலையில் காரியாலயத்தில் நாங்கள் சென்று பார்க்கும் ஒருவரை மாலையில் காணும்பொழுது எங்களில் ஒருவராக பொது இடங்களில் விருந்துகளிலும் விழாக்களிலும் மிகச் சாதாரணமாக எல்லா விஷயங்களைப் பற்றியும் எங்களுடன் விவா

* 28—10—65 அன்று சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை.

தித்துக் கொண்டிருப்பார். பொதுமக்கள் எந்த உதவிக்கு வேண்டுமானாலும் எப்பொழுதும், யாரும் அவரை அணுக தயங்கவே வேண்டாம். மக்கள் மற்ற சிபார்சுகளுக்கு வந்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்குக் கிடை யாது. காரணம் மக்களுக்கும் அவரிடம் செல்வதற்கு அத்தகைய தேவைகளே இருப்பதில்லை. அப்படியே ஏதேனும் தப்பித்தவறி அவரிடம் வந்தாலும் அவர் முடி யாத விஷயங்களை மறுக்கத் தவறுவதில்லை. இதுவே நியதியாகவும் படுகின்றது. விவசாய குடும்பங்களிலிருந்து சட்டசபை பிரதிநிதிகளாக வருபவர்கள் தமது சூழ்நிலையை மறப்பதில்லை. விவசாய முன்னேற்றத்திற்கும் அப்பெருங் குடி மக்களுக்கும் எவ்வளவு உதவியாக இருக்க முடியு மென்று யோசித்து தம்மால் இயன்றதை தாமே செய்ய முன் வருகின்றனர். ஒவ்வொரு விவசாய மன்றமும் தமது மன்றத்தில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு என்று ஒரு பகுதி ஒதுக்கி வைக்கின்றனர். மன்றத்தின் விசேஷ கூட்டங்கள், நிர்வாக கூட்டங்கள், மகாநாடுகள் இவை களில் முடிவான தீர்மானங்களை அரசாங்கத்திற்கு தெரி விப்பதும் விவசாயிகளின் குரலை சட்ட சபையில் எதிர் ஒலிப்பதுதான் இவர்களுடைய தொழில். விவசாயிகளின் சார்பாக அங்கு வாதாடுவதிலும் வெளியில் வந்து அரசாங்கத்தின் முடிவுகளை விவசாயிகளுக்கு தெரிவிப்ப திலும் இவர்கள் திறமைசாலிகள்.

விவசாயிகளின் நன்மைக்காக, விலை சரிவு ஏற்படக் கூடாது என்றும், அதைப்போல் அவற்றை வாங்கும் பொது மக்கள் விலை அதிகமென்றும் குறைப்பட்டுக் கொள்ளக்கூடாதென்றும் ஒரு சாதகமான விலையை முக்கிய உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து விடுகின்றனர்.

"A price line to the consumers comfort, and a price support to the producer's product"

இதுதான் அதன் குறிக்கோள்.

எல்லாவற்றிற்கும் மேலாக கூட்டுறவுகளின் பங்கு இந்த முன்னேற்றங்களின் பெரும் பகுதிக்கு உரியது. கூட்டுறவு கள் என்று கூறும்போது அவைகளின் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் சட்டம் இயற்றுவதைத் தவிர அரசாங் கத்திற்கு வேறு பங்கு எதுவும் இல்லை. அதேபோல் கூட்டுறவுகளும் பண உதவிக்கு அரசாங்கத்திடம் செல்வ தில்லை. பொருள்களை விற்பனை செய்வதானாலும், உரம், பூச்சி மருந்துகள், மிகப்பெரிய விவசாய கருவிகள் வாங்கு வதானாலும் தாராளமான ஒரு கூட்டுறவில் அங்கத்தினராக இருப்பவர்கள் மிகவும் இலகுவான விலைகளில் இத்தனை ஆண்டுகளில் கடனை அடைப்பது என்ற ஒப்பந்தத்துடன் வாங்கிவிடலாம். கடன் வசதியை பொறுத்த வரையில் கூட்டுறவைத் தவிர தனிப்பட்ட விவசாய சங்கங்கள், பாங்கு கள், மத்திய அரசாங்கம் இவ்வாறு பல வசதிகள் இருக் கின்றன.

பொருள்களை விற்பனை செய்யும் முன் தர ரக வாரியாக பிரிப்பது (grading & quality control) எல்லா இடங்களி லும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. பொது மக்களுக்கு நல்ல உயர்ந்த பொருள்கள் கிடைப்பதற்கும் உற்பத்தி யாளர்கள் நல்ல தரமான பொருள்களையே உற்பத்தி செய்வதற்கும் இது ஒரு எச்சரிக்கையான முறையாக இருக்கிறது. முப்பது சதவீதம் அங்கத்தினர்களின் மூலமும் 20 சதவீதம் அங்கத்தினர் அல்லாதவர்கள் மூலமும் வியாபாரம் செய்யும் கூட்டுறவுகளுக்கு அரசாங்கத்தினிட மிருந்தும் விசேஷ சலுகைகள் உண்டு.

விவசாயம் என்றால் விளைபொருள்கள் மட்டும் அல்லா மல், கால்நடைப் பராமரிப்பும், பால் பண்ணைகளும், கோழிப் பண்ணைகளும், மீன் பண்ணைகளும் மிக விஸ்தார மான முறைகளில் நடைபெறுகின்றன. "கம்பைன்" (Combine) போன்ற பெரிய பெரிய கருவிகளைக் கொண்டு தான் அவர்களுடைய மிகப் பரந்த பரப்புகளான விவசாயப் பண்ணைகளிலும் வேலை செய்ய முடியும்.

நம் நாட்டிலும் கூட பரப்புகள் பரந்தவைகளாக இருக்க வேண்டும். மேலும் மேலும் துண்டுபோடுவதால் விளைச் சலைப் பெருக்க முடியாது. குடும்பத்திற்கு 30 ஏக்கர் நிலம் என்றால் விவசாயத்தில் விருப்பம் உள்ளவனும் திறமை யாக செய்யக்கூடியவனும்தான் விவசாயத்தில் ஈடுபட வேண்டும், மற்றவர்கள் பிறதொழில்தான் பார்க்க வேண்டும்.

அமெரிக்காவின் கிழக்கு பகுதியில் வாஷிங்டனில் (Washington) இருந்து புறப்பட்டு ஒஹாயோ (Ohio), முசௌரி (Mussorie), ஒக்லஹோமா (Oklahoma), கலிபோர் னியா (California) முதலிய மாகாணங்களையும், பின்னர் மேற்கிலிருந்து கிழக்கே வரும்பொழுது கொலராடோ (Colorado), நெப்ரெஸ்கா (Nebraska), விஸ்கோன்சின் (Wisconsin), மேரிலாண்ட் (Maryland), நியுயார்க் (New York) முதலிய மாகாணங்களில் எங்களுக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல் மூன்றுமாகாணங்களுக் குச் செல்லும் பொழுது இயற்கையும், மக்களும், செல்வ மும், ஒருமித்து இணைந்து காணப்படுவதால் இதில் என்ன சிரமம் இருக்கிறது என்று நினைத்தோம். ஆனால் கலிபோர்னியாவிற்கு சென்ற பிறகுதான் மனிதனின் திறமை இயற்கையின் திறனையும் மிஞ்சியது என்று விளங் கியது. ஆண்டிற்கு ஏழு அங்குல மழை எனினும் ஏரிகளி லும் குளங்களிலும் உள்ள நீர்பெருக்கினைக் கொண்டு ஆயிரக்கணக்கான நிலங்களை பயிரிடுகின்றனர். தண்ணீரை சிக்கனமாகவும் தேவைக்கேற்றபடி உபயோகப்படுத்து வதற்கு, குழாய்களின் மூலம், இடத்திற்கு ஏற்றபடி நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக் கொண்டிருக்கின்றனர். கலிபோர்னியா பிரதேசத்தில் காணப்படும் பருத்தி வயல் களும் நெல் வயல்களும் எங்களுக்கு இந்தியாவை நினை வூட்டின. இப்பகுதியில் நீக்ரோக்கள் அதிகம். ஒரு நீக்ரோ விவசாய குடும்பத்தினருடன் ஒருவாரம் வசிக்கும் வாய்ப்பு நேர்ந்தது. நீக்ரோக்கள் கடின உழைப்பாளிகள். அவர்களே அப்பகுதியின் முன்னேற்றத்திற்கு பெரிதும் காரணம். ஆனால் நீக்ரோக்களின் கஷ்டம் இன்னும் தீர்ந்தபாடில்லை. அவர்களில் சிறுபான்மையோர் வெள்ளை யர்களின் வெறுப்பையும் கொடுமையையும் மிஞ்சி

முன்னேறிக் கொண்டு இருந்தாலும் பெரும்பாலான நீக்ரோக்களின் நிலை இன்னும் பரிதாபமாகத்தான்

பிற நாடுகளில் சென்று சுற்றிப் பார்க்கும்போது நம் நாட்டின் நிலையையும் மனத்திற்குள் அடிக்கடி ஒத்திட்டு பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
இருக்கிறது.

"இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே", என்று அமரகவி பாரதி கூறியதுபோல அந்த நாட்டிலிருந்து நாம் நமது நாட்டிற்கு எடுத்து வரவேண்டியது என்ன என்றுதான் நமக்குள்ளேயே கேள்விகளை எழுப்பிக் கொள்கிறோம்.

நம் நாட்டின் விவசாய பெருங்குடி மக்கள், பழம்பெரும் குடிகள். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அவர்களை அணுகும்பொழுது, இதமாகத்தான் அவர்களை கையாள வேண்டும். அவர்களுடைய பிரச்னை மனோ தத்துவ பிரச்னைதான். வெகு நாட்களாகவே சமூகத்தின் பிற பகுதியினரைப் போல் அரசாங்கத்தின் கவனத்தை தாங்களும் கவர வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்து வருகின்றது. பழைய பொருள்களைக் கொண்டு புது இழையோட்டி தறிபோட நினைக்கும்பொழுது அதனை ஜாக்கிரதையாகவும் திறமையுடனும் செய்ய வேண்டும். பாரத நாட்டின் பழம் பெரும் மக்களை கொண்டு புதிய முயற்சிகளில் ஈடுபடும்பொழுதும் இந்த திறமைதான் நமக்கு வேண்டும்.

விவசாய பெருங்குடி மக்களும், நெருக்கடியான நிலை நாட்டில் ஏற்படும்பொழுது தங்கள் கடமைகளை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும். மேலும் மேலும் அவர்கள் விளைச்சலை பெருக்க, அவர்கள் மனமும் மனையும் நிறைவு பெற அரசாங்கமும் ஒத்துழைக்க வேண்டும். இருபுறத்திலும் உண்மையான முயற்சிகள் இருக்குமேயாகில் வெற்றி காண்பது நிச்சயம்.

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

மரத்திற்கு சாதாரணமாக உரமிடுவதில்லை. ஏக்கருக்கு முப்பது ராத்தல் தழைச் சத்து (நைட்ரஜன்) தேவைப்படுகிறது. இதில் ஒரு பாதியை தொழு உரமாகவும், மற்ற ஒரு பாதியை அம்மோனியம் சல்பேட்டாகவும் முருங்கை மரத்திற்கு இடப்பட்ட சோதனையில் உரமிடப்பட்ட மரங்கள் உரமிடப்படாத மரங்களைக் காட்டிலும் ஆறு மடங்கு அதிகக் காய் கொடுப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு 3,000 ராத்தல் தொழு உரமும், 75 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும் தேவைப்படும்.

'இம்பூன்'—ஒரு புதிய தக்காளி :—அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள 'இம்பூன்' என்னும் புது வகைத் தக்காளி நமது நாட்டில் நல்ல மகசூல் கொடுக்கிறது. பழங்கள் பெரியதாகவும், உருண்டையாகவும் இருக்கின்றன. ஒரு பழத்தின் சராசரி எடை 20 கிராம். மேலும் 'இம்பூன்' தக்காளிப் பழத்தில் விதை அதிகம் கிடையாது. பழங்கள் நல்ல சதைப்பற்றுள்ளவையாக இருக்கின்றன. சிறிதளவு 'இம்பூன்' தக்காளி விதை குன்னூரில் உள்ள சர்க்கார் பழ ஆராய்ச்சிப் பண்ணையில் கிடைக்கும்.

நம் கடமை

எம். இராமசாமி,
மாதிரிப் பண்ணை விவசாயி,
பதுவம்பள்ளி.

பொறுமை மிக்க நமது நாட்டைப் போற்றி வாழுவோம்—கெட்ட
வறுமைப் பேயை விரட்டியோட்டும் வழியைத் தேடுவோம், நாம் வழியைத் தேடுவோம்.

பாரிலே பேர் பெற்ற பாரத நாட்டில் நாம்
பலபேரும் தொண்டர்களாய் பணிகளாற்றுவோம்,
நாம் பணிகளாற்றுவோம்.

நம்மை நாமே காத்துக்கொள்ளும் முறையில் உழைக்கும்
நல்ல தொண்டர் படையிற் சேர்ந்து நாளும் உழைப்போம், நாம் நாளும் உழைப்போம்.

கல்வியறிவு போதாத மக்களுக்கெல்லாம் நல்ல
கருத்துரையை எடுத்து ஓதித் தெளிவை யூட்டுவோம்,
நாம் தெளிவை யூட்டுவோம்.

தீக் குணங் கொண்ட திருடும் கயவர் கூட்டத்தைத்
தெரிந்து பிடித்தறி வுரைத்துத் திருத்த முயலுவோம்,
நாம் திருத்த முயலுவோம்.

பாரினிலே விவசாயமது பெருகினாலே நாட்டில்
பலவகைத் தொழில்களும் முன்னேறியே வாழும்,
நாடு முன்னேறியே வாழும்.

பக்குவமாய் இதை மனதிற் கொண்டு நாமும்
பாங்காக விவசாயம் பெருக்கி வாழுவோம்,
நாம் பெருக்கி வாழுவோம்.

காலத்துக்கு ஏற்ற முறை தனைக்கைக் கொண்டு நல்ல
கருத்துடனே நவீன முறைக் கருவிகள் கொண்டே,
நாம் கருவிகள் கொண்டே,

காலங்கண்டு பூமி தன்னை உழுது போட்டுமே நல்ல
கம்போஸ்டும் ரசாயன உரங்களுமே போட்டு,
நாம் உரங்களுமே போட்டு,

பொறுக்கு விதைகளான நல்ல வித்துக்கள் கொண்டே நல்ல
பூமிதன்னிலே விதைத்து நீருமே பாய்ச்சி,
நாம் நீருமே பாய்ச்சி

புல்பூண்டு முளைக்க முளைக்கக் களைகளெடுத்தே கெட்ட
பூச்சிகளண்டாதபடி மருந்துகள் தெளித்தே,
நாம் மருந்துகள் தெளித்தே

கழனியிலே விளைச்சல் தனைப் பெருகிடச் செய்தே நாம்
காலமெல்லாம் சுகித்திட நற்கடமைகள் செய்வோம்,
நாம் கடமைகள் செய்வோம்—இன்னும்

கருணைமிக்க தந்தையான காந்தி மகானின்
கருத்துரையைக் கருத்துள்ளிருத்திக் கவலை நீக்குவோம்!
நாம் கவலை நீக்குவோம்!

கரும்புப் பயிரில் சோகை பரப்புதல்

(ப. பரமானந்தம், கரும்பு பெருக்க அலுவலர், திருச்சி.)

சாதாரணமாக கரும்பு ஓர் ஆண்டுப் பயிர். நிலத்தில் ஓர் ஆண்டு காலம் இருக்க வேண்டியிருப்பதால் கால பருவ நிலை மாறுதலுக்குட்பட வேண்டியுள்ளது. மழை காலத்தில் நீர் தேக்கத்தாலும், கோடை காலத்தில் வரட்சியாலும் பாதிக்கப்படுகிறது.

மழை காலத்தில் நீர் தேக்கத்திலிருந்து விடுபட வடிகால் கிடங்குகள் எடுத்து அதிக நீரை வடியவிட்டு பயிரை பாதுகாப்பதே முறை. கோடை காலத்தில் வரட்சியால் பாதிக்கப்படும் பயிரைப் பாதுகாக்க கரும்பு வரிசைகளின் ஊடே சோகை பரப்புதல் ஒரு முறை. இதனுல் பாசன நீர் தேவையைக் குறைப்பதுடன், அது வீணே சேதமாகாமல் பாதுகாப்பது மட்டுமல்லாமல் இன்னும் பல விதங்களில் பயிரை நன்மை அடையச் செய்கிறது.

கரும்பு நடவு செய்த ஒரு மாதத்திற்குள் களை எடுக்க வேண்டும். களை எடுக்கும்பொழுது கரும்பு வரிசைகளுக்கு ஊடேயும் வரிசைகளில் உள்ள கரும்புக்கு மத்தியிலும் களைக்கொத்தால் நன்கு கொத்திவிடவேண்டும். முதல் உரம் வைத்தவுடன் (கரும்பு நட்ட 45 நாட்களுக்குள்) காய்ந்த கரும்பு சோகைகளை பத்தையாக இரண்டு கரும்பு வரிசைகளுக்கும் நடுவில் நெடுக இடைவெளி இன்றி பரப்பவேண்டும். இந்த கரும்புச் சோகை பத்தைகள் காற்றினுலும், பாசனத் தண்ணீராலும் இடம் பெயராமல் இருக்க பார்த்துக் கொள்ளவேண்டும்.

சாதாரணமாக தோட்டக்கால் பிரதேசங்களில் நீர்ப் பாய்ச்சிய நான்கு நாட்களில் நிலம் காய்ந்துவிடும். சோகை பரப்பிய இடங்களில் பாசனத்தண்ணீர் தேவை குறைவாக இருப்பதுடன் 7, 8 நாட்களுக்கு ஈரம் காத்துக்கொள்ளக் கூடியது. இதனுல் கோடையில் கரும்புக்கு பாய்ச்ச வேண்டிய பாசன எண்ணிக்கையை குறைக்கலாம். கரும்பு சோகை பரப்புவதால் ஈரம் காத்துக்கொள்வது மாத்திரம் அல்லாமல் தண்ணீர் சேதத்தையும் தடுக்கிறது. அது மாத்திரம் அல்லாமல் வரிசைகளுக்கு ஊடே உள்ள நிலத்தை மூடி இருப்பதால் களைகள் வளருவதை தடுக்கிறது. மேலும் கரும்புத்தூரைச் சுற்றி நிலத்தின்மேல் பாகத்தில் வெப்பத்தை தணிப்பதாலும் ஈரத் தன்மை இருப்பதாலும் கரும்பில் விழும் குருத்துப் பூச்சியை தடுக்கிறது. சோகை பரப்பிய நிலத்தில் குருத்துப் பூச்சியின் தாக்குதல் குறைவு.

மேற்கூறிய காரணங்களால் சோகை பரப்பிய நிலங்களில் கரும்பின் நிலை நன்ருக இருந்து ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 3 டன் அதிக மகசூல் கொடுக்கிறது. விவசாயிகளின் நிலத்தில் போடப்பட்ட உற்றுநோக்கு வயல்களில் கிடைத்த மகசூல் விபரம் :—

கிராமம்.	தாலுக்கா.	நடவு தேதி.	அறுவடை தேதி.	சோகை பரப் பாத வயலில் ஏக்கர் மகசூல். டன். கிலோ	சோகை பரப் பிய வயலில் ஏக்கர் மகசூல். டன். கிலோ	ஏக்கர் ஒன்றுக்கு கூடுதல். டன். கிலோ
(1). கரிசகுளம்,	ஸ்ரீவில்லிப்புத்தூர்	6—5—64	23—6—65	34 890	36 570	1 680
(2). ராஜபாளையம்,	,, ..	2—6—64	25—5—65	32 450	34 640	2 190
(3). நிலக்கோட்டை,	நிலக்கோட்டை ..	1—5—64	29—6—65	42 360	43 010	0 650
(4). ராமராஜபுரம்,	,, ..	10—5—64	14—6—65	47 050	47 250	0 200
(5). அலங்காநல்லூர்,	,, ..	1—3—64	14—12—64	37 200	40 900	3 700
(6). ஊர்சேரி,	,, ..	20—3—64	15—12—64	37 400	41 900	4 500
(7). பு. சங்கேந்தி,	லால்குடி ..	15—7—64	15—6—65	39 916	43 545	3 629
(8). சிறுமயங்குடி,	,, ..	20—8—64	20—6—65	44 518	45 359	0 841
(9). பூவாளூர்,	,, ..	25—5—64	20—5—65	49 260	49 895	0 635

திரும்பத் திரும்ப தண்ணீர் பாய்வதால் இடைவெளியில் போடப்பட்டுள்ள சோகை இற்று மக்கிவிடுகிறது மண் அணைக்கும் காலத்தில் சிறந்த உரமாகிறது. வரட்சியான பிரதேசங்களில் 6 முதல் 9 மாதப் பயிரிலும்கூட ஈரம் காப்பதற்காகவும் தண்ணீர் சேதத்தை தடுக்கவும் காய்ந்த சோகையை மக்கவைத்து உரமாக்கவும் ஒரு வரிசை விட்டு மறுவரிசையில் சோகையை பரப்பலாம். இதனுல் கோடையில் ஈரப் பாதுகாப்பு ஏற்பட்டு பயிருக்கு நன்மை பயக்கும். சோகை கரும்பு வெட்டும் காலத்துக்குள் மக்கி உரமாகி விடும்.

ஆகவே கரும்பு பட்டங்களில் காய்ந்த சோகைகளை பரப்பி மக்கவிடல் வரட்சிக் காலத்தில் ஈரப்பாதுகாப்புக்கும், களை வளர்ச்சியை தடுக்கவும், குருத்துப்பூச்சி தாக்குதலிலிருந்து தப்பவும், காய்ந்த சோகைகளை சிறந்த உரமாக்கவும் ஒரு நல்வழியாகும்.

IP.G.22.T.

"விவசாய உற்பத்தியை
அதிகரிப்பதற்கான திறவுகோல்
நைட்ரோஜன், பாஸ்பாரிக் அமிலத்துடன்
பொட்டாஷ்"
சேர்ந்த கலப்பு உரங்களே!
என்று தேர்ச்சிபெற்ற விவசாயி கூறுகிறுர்.

எனவே உங்கள் உரத்திட்டத்தில்
பொட்டாஷ்
சேர்க்கத் தவருதீர்கள்

இதனுல்
விளைச்சல் பெருகி
அதிகரித்த லாபமும்
கிடைக்கிறது.

பயிர்களுக்கு உரமிடுவது குறித்து இலவச ஆலோசனையும்,
குறிப்புகளும் விவரங்களும் கிடைக்கும்;
இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜன்ஸி லிமிடெட்
8/9, தம்புச்செட்டி தெரு, சென்னை-1.

கேள்வியும் பதிலும்

விஸ்தரிப்பு பகுதி

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம் கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

அரங்க சின்னராசு, கல்லணை, வட ஆற்காடு மாவட்டம்.

கே.—பூமியின் "அமிலத்தன்மை" அல்லது "காரத் தன்மை" அதிகப்படியுள்ளதை அறிய ஒரு சிறந்த மார்க்கத்தை தெளிவாக விளக்க வேண்டுகிறேன்.

குறிப்பு.—அமிலத்தன்மை அல்லது காரத்தன்மை அதிகப்படி (தேவைக்கு அதிகப்படி) யுள்ளதை அறியும் வழியை நாட்டுப்புறங்களில் வழங்கும் நிலங்களின் பெயர்களை ஒட்டிக்கூறும்படியும் வேண்டுகிறேன்.

உதாரணம்:—

1. களர்பூமியில் அமிலத்தன்மை அதிகமா? காரத்தன்மை அதிகமா?
2. மணற்காலில் அமிலத்தன்மை அதிகமா? காரத்தன்மை அதிகமா?
3. களர் ஒட்டில் அமிலத்தன்மை அதிகமா? காரத்தன்மை அதிகமா?

போன்ற முறையில் விளக்கம் தரவும் வேண்டுகிறேன்.

ப.—உங்கள் நிலத்திலிருந்து கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி ஒரு மண் மாதிரியை எடுத்து உங்களுக்கு அருகாமையிலுள்ள மண் பரிசோதனைசாலைக்கு அனுப்பி மண்ணின் அமிலத்தன்மை அல்லது காரத் தன்மையும் அதற்கேற்ற உர விபர சிபாரிசுகளையும் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் காட்டியுள்ள உதாரண வகைப் பூமிகளில் ஒவ்வொரு மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி விளக்கம் பெறலாம்.

களர்பூமி என்பது "Alkali soil"-ஐத்தான் குறிப்பிடுகிறது. அது காரத்தன்மை வாய்ந்தது.

மண் மாதிரி எடுத்தல் :—

1. மண் மாதிரி எடுப்பதற்குத் தகுந்த காலம் அறுவடைக்குப்பின் ஆகும். உரமிட்ட வயலில் மூன்று மாதத்திற்குள் மண் மாதிரி எடுக்கக்கூடாது.

2. பரிசோதனைக்கு எடுக்கப்படும் மண் எடுக்கப்பட்ட நிலத்தின் உண்மையான தரத்தைக்கொண்டதாக இருக்க வேண்டும். எருதுவித்த இடங்களின் அருகாமையிலும் வரப்பு ஓரங்களிலும் மண் மாதிரிகள் எடுக்கக்கூடாது.

3. நிலச்சரிவு, மண்ணின் நிறம், மண் கூறுபாடு, நிலவள வேறுபாடு, முன் பயிர் மற்றும் பாசன வடிகால் வசதிகள் இவைகளைப் பொறுத்துத் தனித்தனி மண் மாதிரிகள் எடுத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு வயலுக்கும் ஒவ்வொரு மண் மாதிரி எடுத்தல் நல்லது. அதிகபட்சம் 5 ஏக்கருக்கு மேற்படாத நிலத்தில் இருந்து ஒரு மண் மாதிரி எடுத்தல் வேண்டும்.

5. மண் மாதிரி எடுக்குமுன் நிலப்பரப்பின்மேல் உள்ள இலை, புல், சருகு முதலியவற்றை அகற்றுதல் வேண்டும். ஆனால் மேல் மண்ணை நீக்குதல் கூடாது.

6. முதலில் மண்வெட்டியால் V வடிவமாக நிலத்தில் வெட்டிய பிறகு அதில் ஒருபுறச் சரிவில் மேலிருந்து கீழ் ஒரு அங்குல கனத்திற்கு மண் சேகரிக்கவேண்டும். இதைப்போன்று 10 முதல் 20 இடங்களில் எடுத்தல் வேண்டும்.

7. மேல் மட்டத்திலிருந்து உணவுச் சத்துக்களை எடுக்கும் தானியப் பயிர்கள் மேலும் நிலக்கடலை போன்ற பயிர்களுக்கு 6 அங்குல ஆழமும், கரும்பு, வாழை, பருத்தி போன்ற பயிர்களுக்கு 9 அங்குலம் வரையும், பல ஆண்டுகள் நிலத்தில் நிற்கும் பழத்தோட்டங்கள், தென்னை போன்ற பயிர்களுக்கு 0-12" மேலும் 12"—24 அங்குல ஆழத்திலும் தனித்தனியாக மண் மாதிரி எடுத்து தனித்தனி பைகளில் அனுப்புதல் வேண்டும்.

8. மண் மாதிரிகள் ஈரமாக இருப்பின் அவைகளை நிழலில் உலர்த்தல் வேண்டும். உரங்கள், பூஞ்சாண, பூச்சி நாசினிகள் உள்ள இடங்களில் மண் மாதிரிகளை உலர்த்தலும், வைத்தலும் கூடாது. மேற்கூறிய பொருட்கள் வைக்கப்பட்டிருந்த சாக்குகளையோ, பைகளையோ மண் மாதிரி அனுப்புவதற்கு உபயோகித்தல் கூடாது.

9. பெரிய கட்டிகளை உடைத்து மண்ணை நன்றாக கலந்தபின் அதிலிருந்து ஒரு ராத்தல் மண்ணை 9" × 6" கன

அளவுள்ள துணி பைகளில்போட்டு, ஒவ்வொரு பையின் மேலும் வரிசையாக இலக்கமிட்டு அதே இலக்கத்தை அம் மண்ணிற்குறிய விபரத்தாளில் எழுதி, விபரத்தாள்களை தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

10. உங்கள் பகுதிக்கு மண் அனுப்ப வேண்டிய விலாசம்.

உதவி மண் இரசாயன வல்லுனர்,
மண் பரிசோதனை நிலையம்,
கடலூர்—1.

கே.—நிலத்தின் அதிகப்படி அமிலத் தன்மையைப் போக்கவல்ல காரத்தன்மையுள்ள பசுந்தாள் உரச்செடி வகைகளையும், நிலத்தின் அதிகப்படி காரத்தன்மையைப் போக்கவல்ல அமிலத் தன்மையுள்ள பசுந்தாள் உரச்செடி வகைகளையும் விளக்கமாக தெரிவிக்க வேண்டுகிறேன்.

ப.—நிலத்தின் அதிகப்படி அமிலத்தன்மையைப் போக்க வல்ல காரத்தன்மையுள்ள பசுந்தாள் உரச்செடி இருப்பதாகத் தெரியவில்லை. நிலத்தின் அதிகப்படி காரத்தன்மையைப் போக்கவல்ல அமிலத்தன்மையுள்ள பசுந்தாள் உரச்செடி, தக்கைப் பூண்டாகும். (**Sesbania-aculata**). எருக்கன் இலையும், வேப்ப இலையும்கூட காரத்தன்மையைப் போக்கவல்ல சக்தியுடையவையாகும்.

மண் பரிசோதனைசாலைகளில் மண்ணில் உள்ள கார அமிலத்தன்மை அளவை மதிப்பிட்டு அதற்கேற்ற படி அமிலத்தன்மையைப் போக்க, சுண்ணும்பையும், காரத்தன்மையைப் போக்க ஜிப்சத்தையும் கணக்கிட்டு வேண்டிய அளவு சிபாரிசு செய்யப்படும். ஆகையால் உங்களுக்கு சமீபத்திலுள்ள கடலூர் மண் பரிசோதனை நிலையத்தை அணுகி வேண்டிய சிபாரிசுகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

களர் நிலங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்ட அளவு ஜிப்சமிட்டு நீர் தேக்கி நன்கு கலந்த பின்பு வடிகட்டிய பிறகு தக்கைப் பூண்டு பசுந்தாள் உரப்பயிரை பயிர் செய்து நிலத்தில் உழவேண்டும்.

கே. கே. மாரியப்பன், கோட்டூர் மலையாண்டிபட்டினம்.

கே.—நெற்பயிருக்கு இரசாயன உரங்கள் போடும்போது வயல்களில் எவ்வளவு தண்ணீர் இருக்க வேண்டும்? இட்ட இரசாயன உரங்களின் சத்துக்களை எத்தனை மணியளவில் கிரகிக்கின்றன ? இரசாயன உரம் இட்ட தண்ணீரை 1 நாள் கழித்து வெளியே விட்டால் சத்துக்கள் யாவும் தண்ணீருடன் வெளியே போய் விடுமா ?

ப.—நெற்பயிருக்கு இரசாயன உரங்களிடும்போது வயலில் நீர் குறைவாக இருக்கவேண்டும். $\frac{1}{2}$ அங்குலம் முதல் 1 அங்குலம் வரை தண்ணீர் மட்டம் இருந்தால் போதுமானது. உரமிட்ட பின்னர் 24 மணி நேரம் வரை நீர் பாய்ச்சுவதோ, நீர் வடிப்பதோ கூடாது. ஏனெனில் உரம் நீரில் கரைந்து வயலுக்குப் பயன் படாமல் வயலை விட்டுச் சென்றுவிடும்.

கே.—நெற்பயிருக்கு நாற்றங்காலில், நடவு நடும்போது, புடை வாங்கும் தருணம் மருந்து தெளிப்பு காலையிலா அல்லது சாயங்காலமா ?

ப.—மருந்து தெளிக்கும்போதும், மருந்து தெளித்த உடனும் நல்ல வெய்யிலைத் தவிர்க்க வேண்டும். இதற்கு பகல் வெய்யில் தணிந்துள்ள மாலைநேரத்தில் மருந்து தெளிப்பது நல்லது.

கே.—நெற்பயிருக்கு இரசாயன உரம் எந்தப் பருவத்தில் அதாவது நடும்போது, நட்டபின், புடைவாங்கும் தருணத்தில் இட வேண்டும் ? எவ்வளவு ?

ப.—நாற்றங்காலில் நெல் நாற்றுக்கு அம்மோனியம் சல்பேட் மட்டும் ஒரு செண்டுக்கு ஒரு ராத்தல் வீதம் நாற்று வலுக்காமலிருந்தால் தெளித்தால் போதும்.

நெற்பயிருக்கு ஏக்கருக்கு 150 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டும், 150 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 30 ராத்தல் மியூரியேட் ஆப் பொட்டாசும் இட வேண்டும். இதில் 150 ராத்தல் சூப்பர்பாஸ்பேட்டையும் 75 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டையும, 30 ராத்தல் மியூரியேட் ஆப் பொட்டாசையும் நிலம் சமன்படுத்தும் முன் கடைசி உழவுசாலிலேயே போட வேண்டும். மீதி இருக்கும் 75 ராத்தல் அம்மோனியம் சல்பேட்டை ஒரு மாதம் கழித்து களையெடுக்கும் போது இட வேண்டும்.

செ. ப. முருகேசன், பவானிசாகர்.

கே.—நான் எனது தோட்டத்தில் தென்னம்பிள்ளை போட விரும்புகிறேன். எனது தோட்டத்திலேயே பத்து வருட வயதான தென்னை மரங்கள் உள்ளன. அந்த மரங்களிலிருந்து நெற்றெடுத்துப் போட்டால் அதன் கன்றுகள் காய்க்காது என்று சொல்லுகிறார்கள். அந்த மரங்களிலிருந்து நெற்றெடுத்துப் போட்டு முளைக்க வைக்கலாமா ? வேண்டாமா ? உங்கள் எண்ணம் என்ன ? விளக்கமான விடை தேவை.

ப.—நட்டபிறகு சுமார் 15 வருடங்களுக்குப் பிறகுதான் ஒரு தென்னை மரத்தின் அளவை நிர்ணயிக்க முடியும். 10 வருட வயதான இளம் தென்னை மரங்களிலிருந்து எடுத்த நெற்றுக்களாலான மரங் கள் நல்ல விளைவைக் கொடுக்காது.

தென்னை 20 ஆண்டுகள் ஜீவிக்கக்கூடிய மரமானதாலும், நாளடைவில் தொடர்ந்து அதிக விளைவைக் கொடுக்கக்கூடிய கன்றுகளை பொறுக்கி நடுவது மிகவும் முக்கியமானதாகும். இந்த மாதிரி பொறுக்கி நடுவதில் தவறினால் மரங்கள் நன்றாக வளர்ந்த பின்னர் அத்தோட்டங்களில் குறைந்த விளைவைத் தரும் மரங்களிருந்தால் சாகுபடி செய்வோருக்கு அம்மரங்கள் தங்கள் ஜீவிய காலம் வரையிலும் நஷ்டத்தையே தரும்.

மத்திய பிராயமடைந்த ஆரோக்கியமான நல்ல விளைவைக் கொடுக்கும் தாய் மரங்களிலிருந்தே நெத்துக்கள் எடுக்க வேண்டும்.

தீவிர உற்பத்தி திட்டத்தால் பருத்தி விளைச்சலில் விளைந்த முன்னேற்றம்.

சென்னை மாநிலத்தில் பருத்தியை பரந்த அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களான கோயமுத்தூர், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் 1963—64-ம் வருடம், பருத்தி உற்பத்தியைப் பெருக்க தீவிர உற்பத்தித் திட்டம் அமுலாக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் கோபி, அவிநாசி வட்டங்களிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்திலும், திருநெல்வேலியில் சங்கரன் கோவில் வட்டத்திலும் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் 20,000 ஏக்கர் பரப்பிலும், சங்கரன் கோவில் வட்டத்தில் 10,000 ஏக்கர் பரப்பளவிலும் கோடைப்பருத்தி சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. சாகுபடிக்குத் தேவையான பொறுக்கு விதைகள், உரங்கள் பயிர் பாதுகாப்பு மருந்துகள், திருந்திய சாகுபடி முறைகள் பற்றிய அறிவுரைகள் முதலியன விவசாயிகளுக்கு இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. இப்பகுதிகளில், தீவிர உற்பத்தித் திட்டத்தால் பருத்தி விளைச்சலில் விளைந்த முன்னேற்றம் பற்றி அறிய "பயிர் கணிப்பு சோதனைகள்" நடத்தப்பட்டன.

தீவிர உற்பத்தித் திட்டப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளின் முடிவுகள், திட்டம் அமுல் செய்யப் படாத பகுதிகளில் கணிக்கப்பட்ட விளைச்சலுடன் ஒப்பிடப் பட்டன.

தீவிர உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்ட இடங்களில் பருத்தியின் சராசரி ஏக்கர் விளைச்சல் 1349 ராத்தல் ஆகும். இத்திட்டம் அமுலில்லாத பகுதிகளில் சராசரி பருத்தி ஏக்கர் விளைச்சல் 946 ராத்தலே ஆகும். தீவிர உற்பத்தி திட்டத்தில் பின்பற்றப்பட்ட சாகுபடி முறைகளால், ஏக்கருக்கு சராசரி 403 ராத்தல் பருத்தி கூடுதல் விளைச்சல் கிடைத்துள்ளது என்பது புலனாயிற்று. இது 42·6 சதவீதம் கூடுதல் விளைச்சல் ஆகும்.

எனவே விவசாயப் பெருமக்கள் அனைவரும் பருத்தி பயிரிட சிபாரிசு செய்யப்படும் தீவிர சாகுபடி முறைகளைப் பின்பற்றி விளைச்சலைப் பெருக்க வேண்டும்.

(சென்னை புள்ளிவிவரத்துறை நெறியாளரால் நடத்தப் பட்ட சோதனைகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டது.)

புதிய கிணறு வெட்ட குழாய் கிணறு இறக்க மிக அதிகமான தண்ணீர் உள்ள 2 நீர் ஊற்றுகள் சந்திக்கும் இடம் கண்டு பிடித்துக் கொடுக்கும் நிபுணர்.

1. குழாய் கிணறு இறக்குதல் (Bore Well), புதிய கிணறு வெட்டுதல் (பழைய கிணற்றில் போரிங் குழி போட) இவைகளுக்கு அவரவர்களுடைய பூமியில் உள்ள எல்லா நீர் ஊற்றுகளையும் கண்டு பிடித்து, அவைகளில் உள்ள தண்ணீரின் அளவை விஞ்ஞான முறையில் கணக்கிட்டு, அவைகளில் மிக அதிகமான 2 நீர் ஊற்றுகள் (Cross) சந்திக்கும் சரியான இடம் கண்டுபிடித்துக் கொடுக்கப்படும்.

2. என்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நான் காண்பிக்கும் இடத்தில் (Bore Well) குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை தொடர்ந்து கிடைக்காவிட்டால் ரூ. 2,000 வரை நஷ்டஈடு கொடுக்க நான் உத்திரவாதம் தருகிறேன்.

3. கணபதி கிராமத்தில் சென்னை மாகாணத்தில் உள்ள அனேக வாட்டர் டிவைனர்கள் கண்டு பிடித்துக் கொடுத்த இடங்களில் (Bore Well) குழாய் கிணறு 260 அடி வரை இறக்கியும் தண்ணீர் கிடைக்காத சில தோட்டங்களில் நான் குறித்த இடத்தில் குழாய் கிணறு இறக்கியதில் 10 எச். பி. மோட்டாருக்கு போதுமான தண்ணீர் சப்ளை தொடர்ந்து இரவு பகலாக கிடைத்திருக்கிறது.

முகவரி :— K. கந்தசாமி,
நீர் ஊற்று கண்டுபிடிக்கும் நிபுணர்,
s/o கிருஷ்ண கவுண்டர்,
சக்கிலிய வளவுத் தோட்டம்,
கணபதி போஸ்ட்,
கோயமுத்தூர்-6.

நவீன முறையில் உலர வைப்பதற்காக இயந்திர சாதனமும் அரிசி மில் சொந்தக்காரர்களுக்குக் கடன் உதவி

குறுவை சீசனில் மழை காரணமாக நெல்லை அரிசியாக்க இயலாமல் போய்விடுகிறது. எனவே, நவீன முறையில் நெல்லை உலர வைப்பதற்காக இயந்திர சாதனம் இருந்தால் மழைக் காலத்திலும் மில்களை இயக்க வசதி ஏற்படும். நவீன முறையில் நெல்லை உலர வைக்கும் இயந்திர சாதனம் நிறுவப்படுவதை ஊக்குவிப்பதற்காக, அந்த சாதனத்தை மில்களில் வைக்க விரும்பும் அரிசி மில் சொந்தக்காரர்களுக்கு கடன் உதவி அளிப்பதற்கான திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி கடனுதவி பெற விரும்பும் அரிசி மில் சொந்தக்காரர்கள், சென்னை தொழிற் வர்த்தகத்துறை நெறியாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். மேற்கொண்டு அது சம்பந்தமான விவரங்களை சென்னையில் உள்ள தொழில் வர்த்தகத்துறை நெறியாளர் அலுவலகத்தில் பெறலாம். உலரவைக்கும் சாதனத்தை விவரிக்கும் வரைபடங்களின் பிரதிகளும் அங்கு விண்ணப்பதாரர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

வாழைப் பழத்தை அழுகாமல் பாதுகாக்கும் முறை.

(குமாரி ஏ. பி. சரோஜினி தாமோதரன், டாக்டர் சா. குழந்தைசாமி, கே. நித்தியானந்தன், பூசண இயற்பிரிவு, விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலையம், கோவை-3).

முக்கனிகளில் ஒன்றான வாழைதான் இன்றுள்ள நிலையில் நடுத்தர மக்களும், ஏழை மக்களும் வாங்கக் கூடிய பழவகைகளில் ஒன்றாகும். வாழைதார்கள் முதிர்ந்ததும் வெட்டி சந்தைக்கு எடுத்துச் சென்று விற்பனையாகும் வரை நல்ல நிலையில் பாதுகாக்கப்படவேண்டியது மிக அவசியம். பெருமளவில் வாழை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் விற்பனைக்கு முன் வாழைத் தார்கள் அழுகி வீணுவதன் மூலம் பெருந்தொகையை இழந்து விடுகின்றனர். வெளிநாட்டிற்கு நமது நாட்டிலிருந்து ஒரு கப்பல் நிறைய ஏற்றுமதி செய்யப்பட்ட வாழைப்பழம் அங்கு போய்ச் சேரும் போது அழுகிய நிலையிலிருந்ததால் பல ஆயிரம் ரூபாயை நாம் இழந்தோமென அண்மையில் செய்தித்தாள் வாயிலாக அறிந்தோம். முதிர்ந்த வாழைத்தார்களை வெட்டிய பிறகு பழுத்து விற்பனையாகும் வரையிலுள்ள சேமிப்புக் காலம் (Storage period) நீடிக்கப்பட்டால் இத்தகைய அழிவினைத் தடுத்து நாம் பெருமளவில் வாழைப்பழத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து மிகுந்த லாபம் பெறலாம். இரசாயனப் பொருள்களின் உபயோகத்தால் வாழைத் தார்களை ஏற்றிச் செல்லும்போது உண்டாகும் அழுகல் நோய் ஏற்படாவண்ணமும், பழங்கள் விற்பனையாகும் வரை கெடாமல் நீண்ட நாட்களுக்குச் சேமித்து வைக்கவும் முடிந்தால், வியாபாரிகளுக்கு மிக மிக உதவியாக இருக்கும்.



மருந்தடிக்காத தாரும், மருந்து தெளிக்கப்பட்ட தார்களும்.

இதைக் கருத்தினில் கொண்டு கோவை விவசாயக் கல்லூரி ஆராய்ச்சி நிலயத்தில் முன்னோடியாக சில சோதனைகள் செய்யப்பட்டன. அவை பயனுள்ள முடிவைத் தந்துள்ளன. வெட்டிய முதிர்ந்த வாழைத்தார்களை "மைக்கோஸ்டேடின்" (Mycostatin, the trade name for the Squibb Preparation of mystatin) என்னும் எதிர் உயிர் (Antibiotic) கலந்த நீரில் (400 ppm) நனைத்து எடுப்பதால், அந்தத் தார்களை சுமார் 15 நாட்களுக்கு மேல் கெடாமல் நல்ல நிலையில் பாதுகாத்து வைக்கலாம். மேலும், வாழையைத் தாக்கும் "ஆன்தரக்னோஸ்" (Anthracnose) என்னும் அழுகல் நோய் அந்தத் தார்களைத் தாக்காமல் பாதுகாக்கப்படுகிறது.

சுவை மிக்க வாழை வகைகள் பெருமளவில் நமது தமிழகத்திலும், மற்ற தென் மாநிலங்களிலும் பயிர் செய்யப்படுகின்றன. வாழைப்பழ ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் வாழை ஏற்றுமதி நிறுவனம் (Banana Export Corporation) அண்மையில் ஏற்படுத்தப்பட்டது. ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளில் நம்நாட்டிலிருந்து அனுப்பப்படும் வாழைப் பழத்திற்கு மிகுந்த கிராக்கி உள்ளது. ஏற்றுமதி செய்யப்படும் வாழைத்தார்கள் பெரும்பாலும் கப்பல்களிலேயே வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்நாடுகளுக்குப் போய்ச்சேர குறைந்தது பத்துப் பதினைந்து நாட்களாவதாகும். பிறகு விற்பனையாளர்களுக்குப் பங்கிட்டு, விற்பனை செய்யப்படும் வரை வாழைப்பழம் அழுகாமல் நல்ல நிலையிலிருக்க வேண்டியது அவசியம். விளையுமிடத்திலிருந்து தூர இடங்களுக்கு அனுப்பி விற்பனையாகும் வரையுள்ள காலம் அதிகமாக இருந்தாலும் வாழைப்பழம் அழுகாமல் நல்ல நிலையிலிருந்தால் வாழை வியாபாரமும் ஏற்றுமதியும் அபிவிருத்தியடையும். "மைக்கோஸ்டேடின்" உபயோகிப்பதன் மூலம் வாழைத்தார்களை விற்பனை செய்யும்வரை நல்ல நிலையில் வைத்திருப்பதுடன், அழுகல் நோய் அண்டாமலும் பாதுகாக்கலாம். இங்கு செய்யப்பட்ட சோதனையின் விபரம் வருமாறு :—

ஒரே வயதுடைய முற்றிய மூன்று பச்சநாடன் வாழைத் தார்கள் சோதனைக்குப் பயன்படுத்தப்பட்டன. முதல் தாரில் அழுகல் நோயை உண்டாக்கக் கூடிய பூசண விதைகளடங்கிய திரவம் (Spore suspension of Gloeosporium musarum) தெளிக்கப்பட்டது. இரண்டாவது தாரிலும் முதலில் அழுகல் நோயை உண்டாக்கும் பூசண விதைகளடங்கிய திரவம் தெளிக்கப்பட்டது. அது தெளித்து 15 மணி நேரம் கழித்து "மைக்கோஸ்டேடின்" என்று சொல்லப்பட்ட ஒரு பூசண எதிர்ப்பு எதிர் உயிரி (Antifungal antibiotic), 400 ppm, அதாவது 100 மில்லிகிராம் மருந்து 250 மில்லி லிட்டர் தண்ணீரில் (இது சுமார் 5 தார்களுக்குத் தெளிக்கப் போதுமானது) கலந்து தெளிக்கப்பட்டது. மூன்றாவது தாரில் "மைக்கோஸ்டேடின்" திரவம் 400 ppm தெளிக்கப்பட்டது. 15 மணி நேரம் கழித்து அழுகல் நோய் உண்டாக்கும் பூசண

(25-ம் பக்கம் பார்க்க)

தாவர நோய் மருந்தை உபயோகிக்கும்பொழுது தவறுமல் கவனிக்கவேண்டிய விதிகள்

(எஸ். சீனிவாசன், என். சண்முகம், ப. அ. முகம்மது இப்ராஹிம், மண்டல ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி)

விளைவு பெருகி, ஊதியம் உயர, மண்வளப்பாதுகாப்பு, பொறுக்கு வித்துகள், ரசாயன உரங்கள், நேரத்தில் ஊடுழவு முதலிய முற்போக்கு விவசாய முறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளினுல் கிடைக்கும் முழுப்பலனையும் அடைய வேண்டுமானுல் பயிரைத் தாக்கும் நோய்களிலிருந்தும், விளைபயிரை பாதுகாக்க வேண்டும். நோய்தடுப்பதற்கும், நோய் ஒழிப்பதற்கும் பலதரப்பட்ட மருந்துகள் உபயோகப்படுகின்றன. பொடியாகவும், கரையும் தூளாகவும், கலவைகளாகவும் பல உருவங்களில் இம்மருந்துகள் கிடைக்கின்றன. இந்த மருந்துகளை பரிசோதித்து அறிவிக்கப்பட்ட அளவுகளிலும், தகுந்தபடி நிர்ணயிக்கப்பட்ட முறைகளிலும் உபயோகித்தால்தான் மருந்துகளினுல் ஏற்படும் பூரண பலனை அடையமுடியும். உடம்பிற்குமேலே பூசுவதற்கு மருத்துவர் கொடுத்த மருந்தை உடம்பிற்குள் உட்கொண்டால் எத்தகைய தீங்கு நேருமோ அதுமாதிரி தாவரநோய் ஒழிப்பிலும், ஒவ்வொரு மருந்தையும் குறிப்பிட்ட முறைப்படி உபயோகிக்காவிட்டால் நன்மையைவிட தீமையே விளையும். தாவர நோய்கொல்லி மருந்துகள், விதைகளுடன் கலக்கவும் (Seed treatment), பொடியாகத் தூவவும், தண்ணீரில் கலந்து தெளிக்கவும், பூமியில் ஊற்றி மண்ணிலுள்ள நோய்களைக் கொல்லவும், உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றை உபயோகிக்கும்பொழுது கவனிக்க வேண்டிய முறைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1. விதை மூலம் தொற்றும் நோய்களுக்கு மருந்துகள்.– இம்மருந்துகள் விதைகளின் உள்ளும் புறமும் ஒட்டியுள்ள நோயை உண்டாக்கும் பூசணங்கள், பேதகன்கள் ஆகியவற்றை வளராமல் ஒழித்து, விதைகளின் மூலம் பரவும் நோய்களை வருமுன் தடுக்க உபயோகப்படுத்தப்படுகிறது. நெல் தூரமுகல், சோளக்கரிப்பூட்டை, பருத்தி கருகல் நோய், நிலக்கடலை வாடல் நோய் போன்ற விதைமூலம் தொற்றும் நோய்களைத்தடுக்க விதைகளை மருந்திட்டு கலக்கியபின் விதைக்கிறோம். தொற்று நீக்குவதற் உபயோகப்படும் அக்ரசான், செரசான் போன்ற பாதரசம் கலந்த ரசாயனப் பொடிகள் கொடிய விஷமருந்துகளாகும். கைகளில் படாமலும், நுகராமலும், மருந்து உட்செல்லாமலும் இருப்பதற்குத் தகுந்த பாதுகாப்புகள் மேற்கொள்ளவேண்டும். மருந்து கலந்த விதைகளை உணவிற்காக உபயோகிப்பதோ, கோழிகள் போன்ற பறவை இனங்களுக்குப் போடுவதோ கூடாது. இந்த மருந்துகள் சரியான விதத்தில்தான் விதைகளோடு கலக்கப்படவேண்டும். மருந்து அதிகமானுல் விதைகள் முளைக்காமல் போய்விடலாம். அக்ரசான், செரசான் போனற பாதரச மருந்துகளை ஒரு கிலோ நெல்லிற்கு 2 கிராம் மருந்தும், ஒரு கிலோ சோளத்திற்கு 2 கிராம் மருந்தும் ஒரு கிலோ பருத்திக்கு 3 கிராம் வீதமும் ஒரு கிலோ நிலக்கடலைக்கு 3 கிராம் வீதமும் உபயோகிக்க வேண்டும். பருத்திக்கு கந்தக அமிலத்தில் இட்டு சிற்றிழை நீக்கிய விதைகளில்தான் கலக்கவேண்டும். சோளக்கரிப்பூட்டைக்கு கந்தகத்தூளும் விதையோடு கலக்க உபயோகிப்பதுண்டு. ஒரு கிலோ சோளவிதைக்கு 4 கிராம் கந்தகத்தூள் வீதம் உபயோகிக்கவேண்டும். விதைகளை மருந்துடன் கலக்கும் பொழுது மருந்து கலக்கும் பீப்பாய்களை (Seed dressing drums) உபயோகிப்பது நலம். இப்பீப்பாய்களில் விதைகளை அரைபாகம் வரைதான் போடவேண்டும். மருந்திட்டபின் பீப்பாயை 10–15 நிமிடங்களுக்குக் குறையாமல் சுற்றவேண்டும். மருந்து கலந்த விதைகளை 24 மணிநேரம் பொறுத்து விதைப்பது நலம். மருந்து கலக்கி பீப்பாய்கள் கிடைக்கவில்லையென்றுல், வாய்குறுகலாக உள்ள பானைகளை விதை கலக்க உபயோகப்படுத்தலாம். பானைகளில் பாதிபாகம் வரை விதையை நிரப்பி மருந்து கலந்து, குறைந்தது அரை மணியாவது குலுக்கிய பின்தான் வெளியே எடுக்கலாம். விதை குலுக்க உபயோகித்த பீப்பாய்களையோ பானையையோ திறக்கும்பொழுது, முகத்தை முன்னுல் நீட்டுவது கூடாது. இம்மாதிரி மருந்து கலந்த விதைகள் வீரியமுடன் வேகமாகவும் பழுதில்லாமலும் நோயின்றியும் முளைத்து "விளையும் பயிர் முளையிலே" என்ற பழமொழிக்கேற்ப விளங்கும்.

2. தூள்மருந்துகள்.—சமவெளி பிரதேசங்களில் தூள் மருந்துகள் பெரும்பாலும் சாம்பல் நோயைக் கட்டுப்படுத்தவே உபயோகப்படுத்தப்படுகிறது. சாம்பல் நோய் தடுப்பிற்கு கந்தகத்தூள் சிறந்த மருந்து. இது தவிர மலைத்தோட்டங்களில் தேயிலை சுருட்டை நோய்க்கு (Blister blight of Tea) தாமிரக்கலவைப் பொடிகளும் உலர் சிகிச்சையாக (Dry treatment) உபயோகப்படுத்தப்படுகின்றன. பொடிகள் தூவும்பொழுது விடியற் காலையில் பனிப்பதத்தில் காற்று வீசும் வேகம் குறைந்துள்ள நேரத்தில் தூவவேண்டும். இதனுல் தூள் பறந்து வீணுகாமல் தடுக்கப்படுவதோடு பனி ஈரத்தில் மருந்து இலைகளின் மீது ஒட்டிக்கொண்டு பூசணத்தை ஒழிக்கும். இது தவிர சில சாம்பல் நோய் இலையின் மேலும், சில இலையின்கீழோ அல்லது இரு பாகத்திலுமோ காணப்படும். புகையிலைச்சாம்பல் நோய்க்கு இலையின் மேல் தூவக்கூடாது. செடியின்கீழ் நிலத்தில் தூவ வேண்டும் இதை அனுசரித்து மருந்து தூவ வேண்டும். இது தவிர அளவு முக்கியம். சாதாரணமாக ஏக்கருக்கு 10–15 கிலோ (20–30 ராத்தல்) தூள் தேவையாக இருக்கும். பயிர் வளர்ச்சியைப் பொறுத்து இந்த அளவு மாறுபடும்,

3. கரைசல் மருந்துகள்.—தண்ணீர் கலந்து உபயோகிக்கப்படும் மருந்துகள் கரைசல் மருந்துகள் (Wettable powders) ஆகும். கரையும் கந்தகம் (Wettable sulphur), தாமிரக்கலவைகள் (Copper Compounds), அங்ககப்பூசணக்கொல்லி மருந்துகள் (Organic fungicides) போன்றவை தண்ணீரில் கலந்து உபயோகிக்க வேண்டியவை. இவைகளில் நோய்கொல்லும் திறன், பயிருக்குத் தக்கபடி, நோய்க்கு தகுந்தபடி மாறும். அதற்கேற்றபடி குறிப்பிட்ட அளவு தண்ணீரில் கலக்கவேண்டிய மருந்தின் நிறையும் மாறுபடும். கந்தகக்கரைசல் ½ கிலோ 90 முதல் 135 லிட்டர் தண்ணீரிலும், தாமிரக்கலவைகள் ½ கிலோ 115—135 லிட்டர் தண்ணீரிலும், அங்கக மருந்துகள் (Organic fungicide) ½ கிலோ 270—315 லிட்டர் தண்ணீரிலும், சாதாரணமாகக் கலக்கப்படுகின்றன. நோய்க்கேற்றபடி சரியான விகிதத்தில் இம்மருந்துகள் கலக்கப்படவேண்டியது தலையாய விதியாகும். இது தவிர ஏக்கருக்கு வேண்டிய நீர்க் கலவை 450—675 லிட்டர் வரை தேவையாக இருக்கும். இதுவும் பயிர் வளர்ச்சிக்கேற்றபடி மாறுபடும். நீர்க் கலவைகள் தெளிக்கும்பொழுது, மருந்து செடியின்மேல் சொட்ட சொட்டத்தெளிக்க வேண்டுமெனபதல்ல. இலைகளில் கலவைத்துளிகள் நன்கு படர்ந்து வியாபித்திருந்தால் போதுமானது. கரைசல் மருந்துகளை தண்ணீரில் கரைக்கும்பொழுது, முதலில் குறைந்த அளவில் தண்ணீரில் மருந்தைக் குழம்பாகக் கலக்கி, அக்குழம்பை போதிய தண்ணீரில் கலக்க வேண்டும். கலவைநீரை அடிக்கடி கலக்கிவிட்டுக்கொள்ள வேண்டும்.

போர்டோக் கலவை தயார் செய்யும்பொழுது மிகவும் கவனமாக இருக்கவேண்டும். துத்தக் கலவையைத்தான் சுண்ணும்பு நீரில் ஊற்றவேண்டும். சிறிது நேரம் நன்கு கலக்கியபின் ''கத்திப்பரிசோதனை'' (knife test) செய்யவேண்டும். நன்கு தீட்டிய கத்தியோ, இரும்புத் தகடோ, இந்த கலவையில் முக்கினுல் துருப்பிடித்தல் போல் கத்தியோ, இரும்போ செம்பு நிறமாக மாறக் கூடாது. மாறினுல் துத்தம் அதிகம் என்று பொருள். அதை மாற்ற மேலும் சுண்ணும்பு போடவேண்டும். பழையபடி தீட்டிய கத்தியை முக்கினுல் யாதொரு மாற்றமும் இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் போர்டோ கலவை சரியான விகிதத்தில் கலக்கப்பட்டுள்ளதாகும். துத்தம் அதிகமானுல் இலைகள் கருகிவிடும். போர்டோக் கலவையை தேவையான பொழுதே தயாரித்து உடனடியாக உபயோகப்படுத்தவேண்டும்.

சமீப காலங்களில் நடைபெற்ற பரிசோதனைகளில் க்ஷயரோக மருந்தான ஸ்டெரெப்டோமைசீன் சல்பேட் (Streptomycin Sulphate) பருத்திக் கருகல் நோய்க்கு நல்ல மருந்தாக விளங்குவதோடல்லாமல் மகசூலையும் அதிகப்படுத்தியுள்ளது. கோவையில் செய்த ஆராச்சியில் இம்மருந்தை பருத்திக் கருங்கிளை நோய்க்கு மும்முறை தெளித்ததில் ஏக்கருக்கு சுமார் ரூ. 331 வரை இலாபம் கிடைத்திருக்கிறது. இம்மருந்தை வாங்கி குப்பியைத் திறநது வைததிருக்கக்கூடாது. அவ்வப்பொழுது வாங்கி உபயோகப்படுத்திக்கொள்ளலாம்.

4. மண் மூலம் தொற்றும் நோய்களுக்கு மருந்துகள்.—கத்தரி, தக்காளி போன்ற காய்கறி நாற்றழுகல், புகையிலை நாற்றழுகல், வாழை வாடல்நோய், கத்தரி, மிளகாய் வாடல் நோய் போன்ற நோய்கள் மண்ணின் மூலம் வேரைத்தாக்கி பயிர்களைப் பாதிப்பவை. இவை மேலும் பரவாமல் தடுக்க 0·1 சதவிகிதம் நீரில்கரையும் செரசான் (Wet Cersan), ஒரு சதவிகித போர்டோக் கலவை போன்ற மருந்துகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. இம்மருந்தையும் சரியான விகிதத்தில் நீரில் கரைக்கவேண்டும். இக்கரைசலை ஏக்கருக்கு 450—900 லிட்டர் வரை தாக்கப்பட்ட செடிகளின் தூரில் மண்ணில் நன்ருக ஊறும்படி ஊற்றவேண்டும். இதற்கு பூவாளியை பயன்படுத்தலாம். கரும்புக்கரணைகளை முக்கி நடவும் அகலால் அரிடான் போன்ற கரைசல் மருந்துகள் உபயோகப்படுகின்றன. மருந்துகளை மண்ணில் ஊற்றும்பொழுது தாக்கப்பட்ட செடிகளைச் சுற்றியுள்ள ஆரோக்கியமுள்ள செடிகளின் தூரிலும் ஊற்றவேண்டும்.

மேலே சொன்ன அனுபவ விதிகள் மிக எளிதானவை. அவைகளை அனுசரித்தால்தான் மருந்தின் பூரண பலனை அடையமுடியும். பயிர்சாகுபடியில், நோய் ஒழிப்பிற்கும், பூச்சி அழிவிற்கும் பாதுகாப்பு முறைகள் அனுசரிக்காமல் நல்ல விளைவை அடைய முடியாது என்ற சூழ்நிலை எற்பட்டிருக்கிறது. ஆகையால் மருந்து உபயோகப்படுத்தும்பொழுது, தவருமல் கவனிக்கவேண்டிய விதிகளையும் அனுசரித்து, தாவர நோய்களை அறவே ஒழித்து அதிக விளைச்சல் அடையுங்கள்.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:
ராஜா பண்ணைத் தோட்டம்
இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை
மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை
ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி
புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்
இதர பலவித உயர்ந்த கோடை மிளகாய்,
முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி
முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள்,
தென்னங் கன்றுகள், கனி நாசினிகள்
கிடைக்குமிடம்:—
ராஜா பண்ணைத் தோட்டம்
2, வைத்தியராமய்யர் தெரு, தி. நகர்
(இந்தி பிரசார சபா அருகில்), சென்னை-17.
தந்தி: RAJSEED போன்: 42262



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்,

விவசாயிகளின் நன்மைக்காக முன்கூட்டியே காலநிலை மாறுதலால் விவசாயிகள் கையாள வேண்டிய வழி முறைகள் பற்றி அறிவிக்கும் ஒரு பகுதி விவசாய இலாகாவில் பணியாற்றுகிறது. விவசாயத்தில் காலநிலை முக்கியமான பங்கு பெறுகிறது. நம் பயிர் சாகுபடியே நமக்கு கிடைக்கக்கூடிய மழையின் அளவையே பொறுத்திருக்கிறது. ஆகவே, விவசாயிகளாகிய நமக்கு, சரியான மழை அளவு விவரமும், முன் கூட்டியே திடீரென காலநிலை மாறுதல் விவரமும் தெரிவிக்கப்பட்டால், பெரிதும் நன்மையாக இருக்கும். இதற்காக தனிப்பட்ட முறையில் ஒரு இலாகா வேலை செய்தாலும், இத்திட்டத்தின் வெற்றி நம் விவசாயிகளின் ஒத்துழைப்பில் தான் இருக்கிறது.

விவசாயிகளுக்கான காலநிலை திருச்சி அகில இந்திய வானொலி மூலம் மாலை 7–30 முதல் 8–00 வரையான கிராம ரேடியோ மன்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்படுகிறது. விவசாயிகளுக்கான காலநிலைச் செய்தி, சென்னையிலுள்ள விவசாய இலாகா செய்தி நிலையம், திருச்சி அகில இந்திய வானொலிக்கு அனுப்புகிறது. ஆகவே, நீங்கள் இந்த விசேஷ ஒலிபரப்பைக் கேட்டு, விவசாயிகளுக்கான காலநிலைச் செய்தி நமக்கு உபயோகமாக இருக்கிறதா, தக்க காலத்தில் உங்களுக்கு செய்தி வந்து சேருகிறதா. அதன் பலன் என்ன ?—என்பதையெல்லாம் குறித்து தாங்கள் எனக்கு எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தொடர்ச்சியாக இவ்வொலிபரப்பைக் கேட்டு எழுதுமாறு வலியுறுத்துகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் நலனைக் கருதும்,
து. கணபதி,
வானொலி விவசாய அலுவலர்,
36-B, மௌண்ட் ரோட், சென்னை-2.

சென்ற மாதத்தில் நீங்கள் கேட்ட நிகழ்ச்சிகளில் நினைவில் கொள்ள வேண்டியவை.

சென்னை மாநிலத்திலுள்ள தீவனப் பயிர்கள்.

நிலத்தைப் பண்படுத்தி, ஏக்கருக்கு 40 வண்டி தொழு உரமிட்டு 2½ முதல் 3 அடி இடைவெளியில் பார்கள் பிடித்து புல் வகைகளைப் பாசன வசதியுடன் சாகுபடி செய்யலாம். வருடத்துக்கு 8—10 அறுவடைகளில் கினியாப்புல் ஏக்கருக்கு 15,000 ராத்தல் பச்சைப்புல் தரும். எருமைப்புல் 80,000 முதல் ஒரு லட்சம் ராத்தல் பசும்புல் தரும். யானைப்புல் 150,000 முதல் 200,000 ராத்தல் பசும்புல் அளிக்கும். நேப்பியர்-கம்பு ஒட்டுப்புல், நேப்பியர் புல்லைவிட தரத்தில் சிறந்தது. "லூசர்ன்" எனப்படும் குதிரை மசால் புரதச்சத்து வாய்ந்த தீவனமாகும்.

மானாவாரியாக மேய்ச்சல் தரைகளில் வெள்ளை கொழுக்கட்டைப்புல், சீமைக் கொழுக்கட்டைப்புல் முதலியவற்றை வளர்க்கலாம். வருடத்துக்கு 30,000 முதல் 40,000 ராத்தல் வரை பசும்புல் கிடைக்கும். வரப்புகளிலும், சாலையோரங்களிலும், தோட்டக்கால் வயல்களில் வாய்க்கால் ஓரங்களிலும் வடிகால் ஓரங்களிலும் கினியாப் புல்லையும், நீர்ப்புல்லையும் பயிரிடலாம். புல்வகைகளைத் தவிர கோ. 11 போன்ற சோள ரகங்களையும் பயிரிட்டு தீவனமாக உபயோகப்படுத்தலாம்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி அன்று திருமதி கிரிஜா பாலசுப்ரமணியம், தாவர இயல் வல்லுநர், கோவை அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்.)

திராட்சை சாகுபடி.

தமிழ்நாட்டில் மதுரை, சேலம், கோவை, திருச்சி, செங்கல்பட்டு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுமார் 35,000 ஏக்கர் நிலப்பரப்பில் திராட்சை பயிரிடப்படுகிறது. மணற்பாங்கான வண்டல் கலந்த சரளை அல்லது களிமண் நிலங்கள் திராட்சைக்கு உகந்தவையாகும். தமிழ்நாட்டில் அனுப்-இ-ஷாஹி, பச்சை திராட்சை, பன்னீர் திராட்சை போன்ற வகைகள் பயிரிடப்படுகின்றன. அனுப்-இ-ஷாஹிக்கு 20′×10′ இடைவெளியிலும், பன்னீர் திராட்சைக்கு 10′×10′ இடைவெளியிலும் குழிகள் வெட்ட வேண்டும். வெட்டப்பட்ட குழிகளில் தொழு உரம், எலும்பு உரம், செம்மண், மணல் முதலியவற்றைக் கொண்டு மூட வேண்டும். தொட்டிகளில் பராமரிக்கப்பட்ட திராட்சை செடிகளை இக்குழிகளில் நட்டு நீர் பாய்ச்ச வேண்டும். கொடி வளர்ந்து படர்வதற்கான பந்தலை மரம், சிமெண்ட், கல்தூண் போன்றவற்றைக் கொண்டு அமைக்கலாம். கொடி பந்தலின் உயரத்திற்கு வளரும் வரை, தண்டில் கிளைத்து வரும் இலை கிளைகளை நீக்கி, நேராக வளரவிட வேண்டும். கொடி பந்தலின் உயரம் வளர்ந்தவுடன் நுனிக்குருத்தைக் கிள்ளி விட்டு 2-3 கிளைகளாகப் படரச் செய்ய வேண்டும். திராட்சை நட்ட மூன்றும் ஆண்டு முதல் நல்ல மகசூல் தரும். வளர்ந்த செடிகளை மே மாதம் ஒரு முறையும், நவம்பர்—டிசம்பர் மாதங்களில் மற்றொரு முறையும் கவாத்து செய்ய வேண்டும்.

கவாத்து செய்யும் போது பயிரிடப்படும் வகைக்கேற்ப கணுக்களை விட்டு வெட்ட வேண்டும். ஒவ்வொரு முறை கவாத்து செய்தபின் கொடி ஒன்றுக்கு 100 கிலோ பசுந்தாள் உரம், 100 கிலோ கம்போஸ்ட் அல்லது தொழு உரம், அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், எலும்பு உரம், மூரியேட் ஆ·ப் பொட்டாஷ் ஆகிய ஒவ்வொன்றும் 2 கிலோ வீதம் நன்கு கலந்து நடுத்தண்டைச் சுற்றி 3 அடி இடைவெளியிட்டு 6" தோண்டி உரமிட்டு மூடி நீர்பாய்ச்ச வேண்டும். மாதம் இருமுறை 1 சதவீதம் போர்டோ கலவையும் சல்பர் தூள் தூவ வேண்டும். 50 சத டி.டி.டீ. மருந்தையும் அவ்வப்போது தெளிக்க வேண்டும். இவ்வித முறைகளில் ஒழுங்காக திராட்சையை பராமரித்து வந்தால் பருவம் ஒன்றுக்கு 10,000 கிலோ மகசூலை எளிதில் பெறலாம்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ம் தேதி அன்று கோவை தோட்டகலை நிபுணர் திரு. ஜே. பி. என். அப்துல் காதர் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்.)

இறவை மணிலாவிற்கு தீவிர சாகுபடி முறைகள்.

நிலக்கடலை நல்ல பலன் தர 5" ஆழம் வரை நல்ல புழுதியாகும்படி உழ வேண்டும். டி. எம். வி. 2 (குத்துக்கடலை) டி. எம். வி. 3 (கொடிக்கடலை) ஆகிய ரகங்களை இறைவைப் பயிராக சாகுபடி செய்யலாம். விதைப்பதற்கு முறையே 45—55 கிலோவும், 35—40 கிலோவும் எக்கருக்கு தேவைப்படும். குத்துக்கடலைக்கு 15 சென்டிமீட்டரும், கொடிக்கடலைக்கு 30 சென்டிமீட்டர் இடைவெளி கொடுத்தும் விதைக்க வேண்டும். அடியுரமாக 10 வண்டி மாட்டு உரம் அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். மேலும் 85 கிலோ சூப்பர், 30 கிலோ அமோனியம் சல்பேட், 38 கிலோ பொட்டாஷ், 5 கிலோ வெங்காரம் முதலியவற்றை விதைப்பதற்கு முன்பு போடுவதால் நல்ல மகசூல் கிடைக்கும். விதைப்பதற்கு முன் ரசாயன உரமிடத் தவறினால், விதைத்த ஒரு மாதத்திற்கு பின் களையெடுப்பின்போது போடலாம். பூரண நோய்கள் விதை மூலம் பரவுவதை தடுக்க 1 கிலோ விதையுடன் 2½ கிராம் அக்ரசான் அல்லது செரசான் கலந்து விதைக்க வேண்டும். அசுவுணி, பேன் பூச்சி முதலியவற்றின் சேதத்தைத் தவிர்க்க எக்கருக்கு 7 கிலோ பி. எச். சி. 10 சத மருந்து தூவலாம் அல்லது 1 கிலோ பி. எச். சி. 50 சதவீத மருந்தை 22 லிட்டர் நீரில் கரைத்து ஹெக்டார் நிலத்தில் தெளிக்கலாம். சுருள் பூச்சியைக் கட்டுப்படுத்த 5 சத டி. டி. டீ. 20 ராத்தல் தூவலாம் அல்லது 50 சத டி. டி. டீ. மருந்தை தெளிக்கலாம். புள்ளி நோயைக் கட்டுப்படுத்த எக்கருக்கு 7 கிலோ கந்தகத்தூள் தூவ வேண்டும். அல்லது 3/4 சத போர்டோ கலவை தெளிக்கலாம். இரண்டு முறை களை எடுத்தல் அவசியம். இரண்டாம் களை எடுப்பின்போது மண் அணைப்பதால் மகசூல் அதிகரிக்கும். நிலத்தைப் பொறுத்தும், வறட்சியைப் பொறுத்தும் 8—12 தடவை நீர்பாய்ச்ச வேண்டும். நன்றாக காய்கள் முற்றிய பின் அறுவடை செய்ய வேண்டும். இத்தகைய திருந்திய சாகுபடி முறைகளால் நிலக்கடலை மகசூல் நிச்சயம் அதிகரிக்கும் என்பது உறுதி.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி அன்று தஞ்சாவூர் துணை விவசாய நெறியாளர் திரு டி. பி. ஷண்முக நாயனார் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்.)

சில சத்துள்ள உணவுப் பயிர்கள்

சத்துள்ள காய்கறிப் பயிர்களைத் தோட்டங்களிலும். வீடுகளிலும் சாகுபடி செய்யலாம். ஏ. பி. சி. வைட்டமின்கள் கொண்ட தவசிக்கீரையை வீட்டுக் காய்கறித் தோட்டங்களில் வேலியோரத்தில் பயிர் செய்யலாம். இதை நாற்று விட்டும், குச்சிகள் பதியம் வைத்தும்நடலாம். இரும்புச்சத்து, சுண்ணும்புச்சத்து வைட்டமின்கள் கொண்ட சிலோன் பசலை, நிழல் மிகுந்த இடங்கள், வரப்போரங்கள், பாசன வாய்க்கால் கரைகள், வீட்டுத் தோட்டங்கள் போன்ற இடங்களில் பயிரிட ஏற்றது. செடிகளின் தண்டை நட்டு இதை விருத்தி செய்யலாம். கீரை உணவாகப் பயன்படும். அகத்தியை விதைகள் நட்டு பயிர் செய்யலாம். முருங்கை கீரையும், காயும் சத்துள்ள உணவாகும். இதை விதைகள் நட்டும், குச்சிப் பதியன்கள் மூலமும் விருத்தி செய்யலாம். மேற்கு இந்திய செர்ரியின் பழங்களில் 'சி' வைட்டமின் நிறைய உள்ளது. இதை நாற்று விட்டு, வளர்ந்த நாற்றை 15—18 அடி இடைவெளியில் வெட்டப்பட்ட குழிகளில் நடலாம். நட்ட 3 வருடங்கள் கழித்து காய்ப்புத் தொடங்குகிறது. புதினா வைட்டமின் 'ஏ' சத்து அதிகமுள்ள கீரையாகும். இதை வேர்த்துண்டுகளை நடுவதன் மூலம் பயிர் செய்யலாம். இக்கீரையை மாதம் இருமுறை அறுவடை செய்யலாம். சமச்சீருடைய உணவு கொள்ள சத்துள்ள காய்கறிகளை வீட்டுத் தோட்டங்களிலும் பிற இடங்களிலும் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் தேதி அன்று திரு. பசுலுல்லாகான், கூட்டு விவசாய நெறியாளர் அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்).

கம்போஸ்ட் தயாரிக்கும் முறையும் அரசாங்கத் திட்டங்களும்

கம்போஸ்ட் உரம் தயார் செய்வதன் மூலம் உரத் தேவையைப் பூர்த்தி செய்து நிலத்திற்கு இட்டு விளைச்சலைப் பெருக்கலாம். கம்போஸ்ட் உரம் தயாரிக்க 15'×8'×3' அளவுள்ள குழிகள் வெட்ட வேண்டும். அதில் சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருள்களை கொட்டி சமமாகப் பரப்ப வேண்டும். அதன்மேல் ஒரு கூடை சாணத்தை 10 காலன் தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும். அதன்மேல் எரிமண், தொழுவ மண் சாக்கடை மண் முதலியவற்றில் கிடைப்பதை பரப்பவேண்டும். சூப்பர் பாஸ்பேட்லேசாகத் தூவினால் உரத்தின் சத்து அதிகரிக்கும். இம்மாதிரி அடுக்கடுக்காக குழி மட்டத்துக்கு மேல் 2 அடி வரை பரப்பி மேல் பாகத்தை 2" கனத்துக்கு மண் போட்டு ஆமை ஓடு வடிவம் கொண்டது போல் குழியை

மூடி மெழுக வேண்டும். நான்கைந்து மாதங்களில் நன்கு மக்கிய உரம் 6 டன் கிடைக்கும். இதன் மூலம் ஒரு எக்கருக்குத் தேவையான 60 ராத்தல் தழைச்சத்து கிடைக்கிறது. வீட்டுக் காய்கறித் தோட்டங்களில் வசதிக் கேற்றவாறு நீள அகலத்தை குறைத்து குழிகள் வெட்டி கம்போஸ்ட் தயாரிக்கலாம். கலவை உரம் தயாரிக்க அரசாங்கம் பல சலுகைகள் அளிக்கின்றது. தனிப்பட்ட நபர்கள் உரக்குழி வெட்டி உரம் தயாரித்தால் குழி ஒன்றுக்கு ரூ. 6 மானியமும், பழைய குழிகளில் உரம் தயாரிப்பதற்கு ரூ 3 மானியமும் அளிக்கப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்துக்கள் உரம் தயார் செய்ய குழி ஒன்றுக்கு ரூ. 6 வீதம் பிரதி வருடமும் அளிக்கப்படுகிறது. பஞ்சாயத்து புறம்போக்குகளில் பசுந்தழை செடிகளை வளர்க்க ஆகும் செலவில் 3-ல் 2 பங்கு தொகை மான்யமாக அளிக்கப்படுகிறது. 1,500 முதல் 4,000 ஜனத்தொகை கொண்ட பஞ்சாயத்துக்களில் மலக்கலவை உரம் தயாரிக்க உபகரணங்கள் வாங்கவும், பராமரிக்கவும் 2,000 முதல் 3,600 வரை கடன் வழங்கப்படுகிறது. மாட்டுத் தொழுவம் சீராக அமைத்து எரு சேமிக்க ரூ. 250 கடன் வழங்கப்படுகிறது. அனைவரும் கம்போஸ்ட் தயாரிப்பதில் ஆர்வம் காட்டி உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் தேதி அன்று திரு. எச். ஆதிசேஷையா அவர்கள் ஆற்றிய வானொலி உரைச் சுருக்கம்).

நஞ்சை அறுவடைக்குப் பின் பருத்தியின் தீவிர சாகுபடி

நெல் அறுவடையான நஞ்சை நிலங்களில் அடுத்த போக நெல் பயிரிடுவதற்கு முன்பு இடைக்காலப் பயிராக குறுகிய காலப் பருத்தி பி. 216 எ.ஃப் பயிரிடுவது முக்கியமாகும். குழாய்க் கிணறுகள் போன்ற வசதிகளால் கோடையில் பருத்தி சாகுபடி செய்யலாம். நெல் அறுவடையான பின் சரியான பதத்தில் பருத்தியை விதைக்க வேண்டும். ஜனவரி–பிப்ரவரி மாதங்களில் பி. 216 எ.ஃப் பருத்தியைப் பயிரிடலாம். இது 4½ மாதங்களில் நல்ல மகசூல் கொடுக்கக் கூடிய ரகம். ஒரு ஹெக்டருக்குத் தேவையான 30 கிலோ விதைகளை 125 கிராம் அக்ரசானுடன் கலக்க வேண்டும். விதைப்பதற்கு முன் சாணக் குழம்பும், செம்மண்ணும் சேர்த்துத் தேய்த்து காய வைப்பதால், விதைப்பதற்கு எளிதாகிறது. வரிசைகளுக்கிடையில் 60 சென்டி மீட்டரும் வரிசையில் 23 சென்டி மீட்டரும் இடைவெளி விட்டு தூருக்கு 3—4 விதைகளை ஊன்ற வேண்டும்.

விதைத்த 4—5 வாரங்களில் ஹெக்டருக்கு 125 கிலோ அமோனியம் சல்பேட், 625 கிலோ கம்போஸ்ட் கலந்து, செடியைச் சுற்றி பரவலாக உரமிட வேண்டும். செடி காய் பிடிக்கும் சமயத்தில் ஹெக்டருக்கு 125 கிலோ அமோனியம் சல்பேட் மட்டும் மறுமுறை இடவேண்டும். விதைத்த 10 நாட்களில் முளைக்காத இடங்களில் புதிய விதைகளை ஊன்ற வேண்டும். 20 நாட்களில் களைக் கொத்தால் கொத்தி களையெடுக்க வேண்டும். அப்போதே தூருக்கு செழிப்பான இரண்டு செடிகள் வீதம் விட்டு, மீதிச் செடிகளைக் கலைக்க வேண்டும். ஒரு மாதம் ஆகும் போது மண்வெட்டியால் கொத்தி மண் அணைக்க வேண்டும். இளஞ்செடிகளுக்கு ஒரு மாதத்திற்குள் பாரதியான் தெளிக்கலாம் அல்லது செவின் தூவலாம். வளரும் பயிரில் பேன், அசுவுணி, காய் துளைக்கும் புழு முதலியவற்றைத் தடுக்க பாரதியான் மருந்தை 15 நாட்களுக்கொருமுறை தெளிக்க வேண்டும். காய் பிடிக்கும் போது பாரதியான் அல்லது என்டிரின் மருந்துடன் தாமிர பூசணங் கொல்லியைக் கலந்து தெளிக்க வேண்டும்.

நன்கு வெடித்து மலர்ந்த பருத்தியை காலையில் சுத்தமாகப் பிரித்தெடுக்க வேண்டும். இத்தகைய சாகுபடி முறைகளால் ஹெக்டருக்கு சுமார் 1,100 கிலோ மகசூல் கிடைக்கும். இதனால் ஹெக்டருக்கு ரூ. 643 நிகர லாபம் கிடைக்கும்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ம் தேதி அன்று திரு. ஆர். பாலசுப்ரமணியன், மாவட்ட விவசாய அலுவலர், கும்பகோணம், அவர்கள் ஆற்றிய வானொலி உரையின் சுருக்கம்).

மஞ்சள் சாகுபடி

சென்னை மாநிலத்தில் 10,000 எக்கர்களில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. பொதுவாக நல்ல சத்தான தண்ணீர் தேங்காத, மண்வளம் வாய்ந்த நிலங்களில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. நிலத்தை 5—8 முறை உழுது, 2 அடி இடைவெளியில நவீன கலப்பைகளைக் கொண்டு பார் பிடிக்க வேண்டும். மே–ஜூலை மாதங்களில் பயிர்களின் பக்கத்தில் 8—10" இடைவெளியில் மஞ்சள் துண்டுகளை நடவேண்டும். நடவு செய்ய எக்கருக்கு 6—8 குவிண்டால் மஞ்சள் தேவைப்படும். அடியுரமாக 40—60 வண்டி தொழு உரமிட வேண்டும். கடைசி உழவில் எக்கருக்கு 50—100 கிலோ சூப்பரும், 50 கிலோ பொட்டாஷும் போட வேண்டும். களை எடுத்த பின் மண் அணைக்கும் போது எக்கருக்கு 45 கிலோ யூரியா போட வேண்டும். இரசாயன உரங்களுக்குப் பதில் 100—225 கிலோ கலப்பு உரம் எண் 14 போடலாம். நட்ட 3, 6-வது வாரங்களில் களையெடுக்க வேண்டும். நட்ட 3-வது மாதத்தில் மண் வெட்டியால் கிளரிய பின் செடிக்கு மண் அணைக்க வேண்டும். செடி வாடிப் போகாமல் நீர் பாய்ச்ச வேண்டும்

மஞ்சளைத் தாக்கும் இலைப்புள்ளி நோயைத் தடுக்க பூசணங்கொல்லி மருந்தை தெளிக்க வேண்டும். அழுகல் நோயைத் தடுக்க செஷண்டு காம்பவுண்ட், அல்லது 0·1 சத நீரில் கரையும் செரசான் மருந்தை நிலத்தில் விட வேண்டும். திரிப்ஸ் மூலம் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்க பாரதியான் மருந்து தெளிக்கலாம். அறுவடை செய்த மஞ்சளை மாட்டுச்சாணம் கலந்த நீரில் வேகவைத்து, காயப் போடவேண்டும். நன்றாக காய்ந்த பின் கற்களுடன் கூடைகளில் அல்லது பாலிஷ் கருவிகளில் போட்டு குலுக்க வேண்டும். எக்கருக்கு 9–11 டன் பச்சை மஞ்சள் கிடைக்கும். பாடம் செய்த பின் 2 முதல் 2·5 டன் உலர்ந்த மஞ்சள் கிடைக்கும். இதனால் ரூ. 1,000 முதல் 1,200 வரை நிகர லாபம் கிடைக்கிறது. பக்குவப்படுத்தப்பட்ட மஞ்சளை விற்பனை செய்ய ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் ஈரோட்டில்

SL
J.211m;N66
N66.23

அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விவசாயிகளும் வியாபாரிகளும் இந்த ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

(1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்று மாநில விற்பனை அலுவலர் திரு. கே. ஸ்ரீராமன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்).

நீங்கள் கேட்கப்போகும் கிராம வானொலிச் செய்திகள்

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7-30-லிருந்து 8 மணி வரை திருச்சி, சென்னை-எ, திருநெல் வேலி நிலையங்களில் கேட்கலாம்).

4—2—1966

கோடை இறவைச் சோளத் தில் இரட்டிப்பு விளைச் சல் பெறுவது எப் படி ?	திரு. கே. முத்துசாமி, மாவட்ட விவசாய அலு வலர், பொள்ளாச்சி.

8—2—1966

கோடையில் காய்கறி சாகுபடி செய்யுங்கள்.	திரு பி. கே. அய்யாசாமி, உதவி திட்ட அலு வலர், தஞ்சாவூர்.

11—2—1966

எம்.சி.யு. 2 பருத்தி சாகு படி.	திரு. பி. பி. ஆரன், சான் றிதழ் அலுவலர், ராஜபாளையம்.

18—2—1966

புதிய நெல் தினுசு-டெய் சுங் நேடிவ் 1	திரு. இ. ஜி. சிவசாமி, கூட்டு விவசாய நெறி யாளர், சென்னை.

25—2—1966

வடிமுனைக் குழாய்க் கிணறுகள்.	திரு. கே. கோபால கிருஷ்ணன், உதவி விவசாய பொறியாளர், கடலூர்.

பற்றுக்குறை தீர......

"போதிய அளவு உணவு நம் நாட்டிலேயே உற்பத்தி யானால் நாம் ஒவ்வொருவரும் திருப்தியாக சாப்பிடலாம். பற்றுக்குறை இருந்தால் நாம் ஒவ்வொருவரும் முகமலர்ச்சி யுடன் தியாகம் புரியத் தயாராயிருக்க வேண்டும். நாம் இப்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் உணவு நம் நாட்டுத் தேவையில் 8 சதவிகிதத்துக்கும் குறைவுதான். நாம் முழுமூச்சுடன் முனைந்தால் இதை ஈடுகட்டுவது முடியாத காரியமல்ல. காரிப் காலத்திலிருந்தே இதற்கு உடனடி முயற்சி மேற்கொள்ளுவோம். நாம் இப்போது என்ன செய்கிறோம் என்பதையே அடுத்த ஆண்டு நம் உணவு நிலை பொறுத்திருக்கிறது. நம் சுதந்திரத்தைக் காக்க அசைக்க முடியாத பாதுகாப்பு அமைப்பில் உணவு பெருக்கமும் மிக முக்கியம்."

(10-10-65 வானொலி உரையில் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி.)

அமராவதி அணையில் பாசன வசதி

69677

அமராவதி அணைக்கட்டுப் பாசன வசதி சம்பந்தமாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அறிவிப்பில் மாறுதல் செய் யப்பட்டுள்ளது. அதன்படி, அமராவதி அணையின் பிரத மக் கால்வாய் மூலம் கீழ்கண்டவாறு உடனடியாகப் பாசனவசதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலிருந்து மூன்றுவது மைல் வரை பாசன வசதி பெறக்கூடிய பகுதிகளில் புஞ்செய் பயிர்களும் குறு கிய கால நெற்பயிர்களும் பயிர் செய்யப்பட வேண்டும். இரண்டாவது கட்டத்திற்கு தண்ணீரைச் சேகரிக்க நஞ் செய் சாகுபடியை முடிந்த அளவு குறைக்க வேண்டும். மேற்படி பகுதியிலிருக்கும் கரும்புக்கான பகுதிகளில் கரும்பு பயிரிடலாம். ஆயக்கட்டு முழுவதும் தற்போ துள்ள கரும்புப் பயிர்களுக்கு தேவையான இடைவெளி விட்டு குறைந்தபட்ச அட்ஹாக் சப்ளை செய்ய அனுமதிக்க லாம். இரண்டாம் கட்டத்திற்கு தாராபுரம் தாலுகா விற்கு மட்டும் 31-வது மைலிலிருந்து பாசன வசதி இருக்கும், புஞ்செய் பயிர்களுக்கு மட்டும் இடையிடையே சப்ளை இருக்கும். பிரதமக் கால்வாய் மூலம் 1966-ம் வருடம் மார்ச்சு மாதம் 31-ம் தேதிவரை மட்டுமே சப்ளை செய்யப்படும்.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

விதைகளடங்கிய திரவம் தெளிக்கப்பட்டது. மூன்று தார் களும் தனித்தனியே ஒரு சுத்தமான பெட்டியில் வைத்து மூடப்பட்டன. தினமும் பெட்டியைத் திறந்து எந்தத் தாரில் முதலில் நோய் தென்படுகிறதென்பது பரிசீலிக்கப்பட்டது. முதல் தாரில், அதாவது "மைக்கோஸ்டேடின்" தெளிக் காத தாரில், 8—10 நாட்களுக்குப்பிறகு அழுகல் நோயின் அறிகுறிகள் தென்பட்டன. "மைக்கோஸ்டேடின்" தெளிக்கப்பட்ட மற்ற இரு தார்களிலும் அழுகல் நோயின் அறிகுறிகள் 15—20 நாட்களுக்குப் பிறகுதான் தென் பட்டன. மேலும், "மைக்கோஸ்டேடின்" தெளிக்காத தாரில் நோயின் தன்மை மிகக் கடுமையாக இருந்தது. "மைக்கோஸ்டேடின்" தெளித்த தார்களில் நோய் அவ் வளவு கடுமையாக இல்லை.

இதிலிருந்து "மைக்கோஸ்டேடின்" என்னும் மருந்தை உபயோகிப்பதன் மூலம் வாழைப்பழத்தில் அழுகல் நோய் வராமல் காப்பதுடன், முற்றிய தார்களை வெட்டியதி லிருந்து பழமாகும் வரையுள்ள சேமிப்புக் காலமும் நீடிக்கப் படுகிறதென்பது தெளிவாகிறது. இது பெருமள வில் வியாபாரம் செய்யும் வாழை வியாபாரிக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும். விவசாயிகளும் வாழைத் தார்களை வெட்டியதும் சந்தைக்கு எடுத்துச் செல்லுமுன் "மைக்கோஸ்டேடின்" திரவம் தெளித்தால் தார்களை அழுகாமல் நல்ல நிலையில் நீண்ட தூரம் ஏற்றிச் சென்று நல்ல விலைக்கு விற்பனை செய்ய உபயோகமாக இருக்கும்.

புலிக்குளம்

Dr. I. D. மந்திரமூர்த்தி, G.M.V.C., B.V.SC.,
(இயக்குநர், கால்நடை இலாக்கா, சென்னை.)

தமிழ்நாட்டில் புகழ்பெற்ற இனங்களில் இதுவும் ஒன்றாகும். தற்பொழுது இவ்வினம் மறைந்துகொண்டு வருகின்றது. வேகமான ஓட்டத்திற்கு பெயர்போனவை. அக்காலத்தில் இராமநாதபுரம் பெரும் பண்ணையார்கள் வண்டிமாடுகளாகப் பயன்படுத்தி வந்தனர். உருவத்தில் சிறியனவாக இருப்பினும் உழைக்கும் சக்தியில்



புலிக்குளம் காளை

உயர்ந்தவை. மதுரை மாவட்டத்தில் தெற்கு பகுதிகளில் குறிப்பாக கம்பம் பள்ளத்தாக்குகளில் நாடோடி இனமாக இவ்வினத்தை வளர்த்து வருகிறார்கள். வருடத்தில் ஜூலை முதல் ஜனவரி வரை மலைக்காடுகளுக்கே ஓட்டி விடப்படுகின்றன. அறுவடைக்குப் பிறகு உரத்திற்காக வயல்களில் மேய விடுகிறார்கள். இதனாலேயே இதற்கு 'நிடைமாடு' என்ற பெயரும் உண்டு.

காளைகள் மிகுந்த மூர்க்க குணம் உடையவை. 'எறுதழுவுதல்' என்ற விளையாட்டிற்காக சிறு வயது முதற்கொண்டே மூர்க்க குணமுடையவைகளாக பழக்குகின்றனர். இவ்விளையாட்டிற்கு பயன்படுத்துவதாலேயே இவ்வினத்திற்கு ''ஜல்லிக்கட்டுமாடு'' என்ற பெயர் ஏற்பட்டது. வெளித்தோற்றத்திற்கு இவ்வினம் காங்கேய இனம் போலவே தோன்றும். இவைகளைப் பழக்குவது மிகவும் கடினம். விரோதிகளைக் கண்டால் கூட்டமாக சேர்ந்து எதிர்க்கும் தன்மையும், தாயன்பும் இவ்வினத்தில் காணலாம்.

முக்கிய அம்சங்கள்.—

குறைந்த தீவனத்தில் வளர்க்கக்கூடிய இனம். பளு இழுத்தல், நன்செய், புன்செய் உழவுகளுக்கும் ஏற்ற இனம். நல்ல முறையினால் விருத்தி செய்யப்பட்டால் விவசாயிகளுக்கு உகந்த இனமாக பயன்படும்.

அங்க அமைப்புகள்

முகம் நடுத்தர நீளமும், அழகிய மூக்கும், அகன்ற நெற்றியும் உடையது. கொம்புகள் அகலத்தள்ளியும், பின்பக்கம் வளைந்தும், கூரிய முனைகளுடனும் அமைந்துள்ளன. சிறிய, நிமிர்ந்த காதுகளும் எடுப்பான கண்களும் அமைந்துள்ளன. சிறிய, பருத்த கழுத்தும், நன்கு வளர்ந்த திமிலும். மெல்லிய அலை தாடியும் அமையப்பெற்றுள்ளன. உடல் கட்டுக்கோப்பானதும், முதுகு அகன்றும் உள்ளது. வால் நீளமானது' கால்கள் குட்டையாகவும், உறுதியாகவும் அமைந்து உள்ளன. சாம்பல் அல்லது வெண்மை நிறம் கொண்டது.

காளைகள்

சீரான உடலையும், குட்டையான கால்களையும், உறுதி படைத்த பாதங்களையும் உடையன. இடுப்பு, தோள்கள், கழுத்து, இவைகள் நல்ல சதைப்பிடிப்பு உடையதாய் நன்றாக உழைப்பதற்கு ஏற்ப அமைந்துள்ளன. சாம்பல் நிறம் உடையன. தலை, தோள்கள், திமில், வால் மயிர் ஆகியவற்றில் பழுப்பு நிறப்புள்ளிகள் இருக்கும். சில காளைகள் கருப்பும் வெண்மையும் கலந்த நிறமுடையதாகவும் மற்றும் சில சாம்பலும், இருண்ட சாம்பலும் உடைய நிறம் உடையதாகக் காணப்படுகின்றன



புலிக்குளம் பசு

(27-ம் பக்கம் பார்க்கவும்)

உங்கள் உயர்ரக பருத்திக்கு சான்றிதழ் பெற்று பயனடையுங்கள்

(ச. அய்யம்பெருமாள், பருத்திச் சான்றுரை அலுவலர், இராஜபாளையம்)

நமது மாகாணத்தில், கோடை காலத்திலும், குளிர் காலத்திலும் சாகுபடி செய்யப்படும் M C U. 2, M C U. 1 என்ற உயர்ரக அமெரிக்கன் பருத்திக்கு சான்றிதழ் வழங்கும் •திட்டம் சென்னை விவசாய இலாகா வினரால் 1951-ம் ஆண்டில் தொடங்கி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக இத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் பெற்ற பஞ்சுக்கு நல்ல கிராக்கி இருப்பதால் விவசாயிகளும், வியா பாரிகளும் நல்ல பலனடைந்து வருகிறார்கள். 1962–63 ஆண்டிலிருந்து K. 6. (பாண்டியன்) கருங்கண்ணி பருத்தியும் இந்தத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் வழங்கு வதற்கு சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டிலும் (1965–66) இந்த திட்டம் நடைமுறை யில் உள்ளது. விவசாயிகளும், வியாபாரிகளும் இந்தத் திட்டத்தில் கலந்துக்கொண்டு பயனடையும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தத் திட்டம் விவசாயிகள், சென்னை விவசாய இலாகாவினரால் அங்கீகாரம் பெற்ற பொறுக்கு விதைகளை விதைப்பதற்கு தூண்டுகோலா யிருக்கிறது. நல்ல விதை விதைப்பதால் சுத்தமாகவும் நல்ல தரமாகவும் அதிக மகசூல் கிடைப்பதோ டல்லாமல், இந்தத் திட்டத்தின்கீழ் சான்றிதழ் பெற்ற பருத்தியை வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்கு கிறார்கள். வியாபாரிகளால் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்த பருத்தியானது, இந்த அலுவலகத்தினால் அங்கீ காரம் பெற்ற அறவைச் சாலைகளிலும் (Ginning Factory) கட்டுப்போடும் ஆலைகளிலும் (Pressing Factory) இந்த அலுவலகத்திலுள்ள சிப்பந்திகளின் மேற்பார்வையில் பதப்படுத்துவதால், பஞ்சின்தரம், நயமாக இருப்பதோடல் லாமல் சுத்தமாகவுமிருக்கிறது. பம்பாய் நூற்பு, நெசவு ஆணையாளர் (Textile Commissioner, Bombay) அவர்களா லும் பருத்தி கட்டுப்பாடு உத்தரவின்கீழ் பிரசுரிக்கப்பட்ட பஞ்சு விலைகளில், சான்றிதழ் பெற்ற பஞ்சுக்கு "CAMBODIA 'A'" என்ற பிரிவில் அதிக விலை நிர்ணயிக் கப்பட்டிருக்கிறது. சான்றிதழ் பெற்ற பஞ்சுக்கு கண்டிக்கு ரூ. 50. பிரிமியமாகக் கொடுக்கலாமென்றும் உத்தரவிட்டி ருக்கிறார்கள்.

மேற்கண்ட காரணத்தினால் சான்றிதழ் பெற்ற பஞ்சு ஆலை அதிபர்களுக்கும் மனத்திருப்தியைக் கொடுப்பதால், அவர்கள் இதற்கு நல்ல விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள், வியா பாரிகள், ஆலை அதிபர்கள் ஆகிய மூன்றுபேர்களும் அவர் கள் தேவைக்கேற்ப பரஸ்பரம் நன்மையடைகிறார்கள்.

நமது பாரத நாட்டின் நீண்ட இழைப் பருத்திகளில் முக்கிய இடம் வகிக்கும் நம் மாகாணத்தின் இந்த உயர் ரக பருத்திகளை நல்ல முறையில் தரம் குறையாமலும், சுத்தமாகவும் உங்கள் ஒத்துழைப்பினால் உற்பத்தி செய்ய இந்தத் திட்டம் உதவுகிறது என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகையால், மாசி, புரட்டாசி ஆகிய இரண்டு பட்டங்களிலும் விவசாயிகள் தங்கள் உயர்ரக பருத்திப் பயிரையும், வியாபாரிகள் தாங்கள் கொள்முதல் செய்யும் உயர்ரகப் பருத்தியையும் இத்திட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து பயன் பெறுவார்களாக.

இந்தத் திட்டம் பற்றிய விவரங்களுக்கு உங்கள் அரு காமையிலுள்ள விவசாய விஸ்தரிப்பு அலுவலரிடத்தில் விசாரித்தோ அல்லது "பருத்தி சர்டிபிகேஷன் ஆபீஸர், உயர் ரகப் பருத்தி சர்டிபிகேஷன் திட்டம், இராஜபாளையம்" என்ற விலாசத்திற்கு எழுதியோ தெரிந்துக்கொள்ளலாம்.

1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசினர் தென்னை நாற்றங்காலில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விபரம்.

வரிசை எண்.	கிடைக்கும் இடம்.	கைவிருப்பு எண்ணிக்கை.	ஒரு கன்றின் விலை.
1.	பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்	15,000	0·90 காசு
2.	ஸ்ரீரங்கம், திருச்சி மாவட்டம்	2000	,,
3.	செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்	3,000	,,
4.	திண்டிவனம், தென் ஆற்காடு	1,500	,,
5.	வடகரை, திருநெல்வேலி மாவட்டம்	13,000	,,
6.	மூவாலூர், தஞ்சாவூர் மாவட்டம்	10,000	,,

[26-ம் பக்கத் தொடர்ச்சி]

பசுக்கள்;—

சாம்பல் நிறமுடையன. பருமனில் சிறியவை· குறைந்த அளவு பால் கொடுக்கக் கூடியன. மூக்கு, கண்கள், முதுகு, வால் மயிர் ஆகிய இடங்களில் சிவப்பு கலந்த பழுப்பு நிறமான வட்டங்கள் அமைந்திருப்பது இப்பசுக்களுக்கே உரித்தான தனி இயல்பாகும். இதை "செந்தாமரை" என்று வழங்குகின்றனர்.

கன்றுகள்:—

பிறக்கும் பொழுது பொதுவாக சாம்பல் நிறம் உடையவைகளாகப் பிறக்கின்றன.

இவ்வினம் வரவர க்ஷீணதசை அடைந்து வருகின்றது. மதுரை மாவட்டத்தின் ஒரு சில குடியானவர்களிடமே இவ்வினத்தைக் காணமுடியும். எனவே இவ்வினத்தை அபிவிருத்தி செய்வதற்காக இவ்வின பசுக்களும், காளைகளும் செட்டிநாட்டிலுள்ள இராமநாதபுரம் மாவட்ட கால்நடைப் பண்ணையில் சென்ற ஆண்டில் இருந்து பராமரிக்கப்பட்டு வருகின்றன.

கரும்புப் பயிரில் களைகளை ஒழிக்கும் முறைகள்

எஸ். சார்லஸ்தானியேல், எஸ். வைத்தியநாதன், டி. கே. கோபால்ராவ், ஜி. தேவராஜ், குமாரி வி. ஏ. சகுந்தலா,
கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை, குடியாத்தம்

நல்ல மகசூல் அடைவதற்கு முதல் மூன்று அல்லது நான்கு மாதங்கள்வரை கரும்புப் பயிரில் களைகள் வராமல் பாதுகாப்பது மிகவும் அவசியம்.

சாதாரணமாக கரும்பு பயிருக்கு மூன்று களைக் கொட்டு களை எடுப்பும் (Hand hocing) இரண்டுமுறை மண்வெட்டி களை எடுப்பும் (Mammutty Digging) களை வராமல் தடுக்கவும் பயிர் வீரியமாக வளரவும் தேவை என நீண்டகால ஆராய்ச்சிகளின் மூலம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அயல் நாடுகளில் களைகளை ஒழிக்க பெரும்பாலும் களைக்கொல்லி மருந்துகளே உபயோகப் படுத்தப்படுகின்றன.

குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப்பண்ணையில் களைகளை அழிப்பதற்கு எடனல், கொரனக்ஸ், பெர்னுக்சான், டபபான் முதலிய களைக் கொல்லிகளை உபயோகப் படுத்தியும் சோலைகளை கட்டைகளில் பரப்பியும் 1961 முதல் 1964 வரை பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

மூன்று வருடப் பரிசோதனைகளில் கிடைத்த கரும்பு மகசூல், சர்க்கரை அளவு, கரும்பின் எண்ணிக்கை ஒவ்வொருபரிசோதனை முறைக்கும் ஆகும் செலவு முதலிய வைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

பரிசோதனை முறை	மகசூல் எக்காராவுக்கு டன்களில்	அறுவடையின்போது இருக்கிற கரும்பு எண்ணிக்கை எக்காராவுக்கு.	சர்க்கரை சத்து சதவீதம்	களைகளை அழிக்கும் செலவு ரூ. பை.
சாதாரண களை எடுப்பு முறை.	39.1	36.580	12.9	75.50
களைக் கொல்லி களை உபயோகிப்பதால் சராசரி	33.4	32.400	12.2	32.00
சோலை பரப்பும் முறை	46.8	37.400	12.8	50.00

களைக் கொல்லிகளை உபயோகிப்பதால் சராசரி 33.4 டன்கள் கரும்பு மகசூல் கிடைத்தது. ஆனால் சாதாரண களை எடுப்பு மூலம் 39.1 டன் கரும்பு மகசூலும் சோலை பரப்புவதின் மூலம் எக்கருக்கு 46.8 டன் கரும்பு மகசூலும் கிடைத்தது. இது களைக் கொல்லி களை உபயோகிப்பதைவிட எக்கருக்கு 13.4 டன் அதிக மகசூலும், (அல்லது) ரூ. 670 அதிக லாபமும், சாதாரண களைவெட்டு மூலம் அடைவதைவிட 7.7 டன் அதிக மகசூலும் (அல்லது) ரூ. 385 அதிக லாபமும் சோலை பரப்புவதின் மூலம் கிடைத்தது.

அறுவடையின்போது இருந்த கரும்பின் எண்ணிக் கையும் சோலை பரப்புவதனால் அதிகமாயிருந்தது

களைகள் வராமலிருக்க களைக்கொல்லிகளை உபயோகிப்பதால் சராசரி எக்கருக்கு ரூபாய் 34.50 செலவானது. ஆனால் சாதாரண களைவெட்டுக்கு ரூ. 75.50-ம் சோலை பரப்புவதற்கு ரூபாய் 50-ம் செலவானது.

களைகளைப் போக்க களைக்கொல்லிகளை உபயோகிப்பதால் செலவு குறைவானது. ஆனால் மகசூலும் குறைவுபட்டது. சோலை பரப்புவதன்மூலம் சாதாரண களை எடுப்பதைவிட செலவில் ரூபாய் 25.50 குறைவு பட்டதோடல்லாமல் மகசூலும் அதிகரித்தது.

களைக்கொல்லிகளை உபயோகிப்பதால் இரட்டை விதைக் களைகளையே போக்க முடிகிறது. ஒற்றைவிதைக் களைகள் அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. மேலும் களைக் கொல்லிகள் அடித்த 20–25 நாள்வரைதான் களைகள் முளைக்காமல் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பின்னர் களைகள் முளைக்கின்றன.

மேலும் களைக்கொல்லிகளை உபயோகிப்பதால் கரும்பின் சோலைகள் பாதிக்கப்பட்டு இளம் பச்சைநிற மடைந்து பயிரின் வீரியம் குறைவுபடுகிறது. அறுவடையின்போது இருந்த கரும்பு எண்ணிக்கையும், கரும்பு மகசூலும் குறைவுபடுகிறது.

ஒரு எக்கராவுக்கு கரும்பு சோலையைக் கட்டைகளின் மேல் பரப்புவதற்கு 3 முதல் 4 டன் சோலை தேவைப் படும். நட்ட 45–வது நாள் பரப்பப்பட்ட சோலையானது 150 வது நாள் மண் அணைக்குமுன் பலவித வெப்பதட்ப நிலைக்கு உள் ஆவதால் பாதிக்குமேல் சிதைவடைந்து எருவாக மாறிவிடுகிறது. எஞ்சியவையும் மண் அணைக்கும் பொழுது கரும்பின் அடிப்பாகத்தில் வைத்து மூடப்படுவதால் வெளிக்காற்றிலிருந்து விலக்கப் படுவதாலும் நுண்ணுயிர்களின் செயலுக்கு இலக்காகி முழுச்சிதைவடைந்து நல்ல எருவாக மாறுகிறது.

3 முதல் 4 டன் சோலையிலிருந்து சுமார் $1\frac{1}{2}$ டன் கம்போஸ்ட் கிடைக்கிறது. $1\frac{1}{2}$ டன் கம்போஸ்டில் சுமார் 9 கிலோ தழைச்சத்தும், 9 கிலோ மணிச் சத்தும், 4.5 கிலோ சாம்பல் சத்தும் கிடைக்கும் என கணக்கிடப்படுகிறது. ஆகவே மேற்கூறிய சத்துக்கள் சோலை பரப்பரப்புவதால் நிலத்திற்கு கிடைக்கிறது.

கட்டைகளில் சோலைபரப்புவதால் கீழ்க்கண்ட நன்மைகள் அடையலாம்.

(1) பின்செய்நேர்த்தியில் சாதாரண களைவெட்டு முறையைவிட செலவில் ரூ. 25 குறைவாகிறது.

(2) களைகள் வராமல் பாதுகாக்கிறது.

(3) ஈரம் காத்து நல்ல வீரியம் உள்ள கரும்பு உருவாகி நல்ல மகசூல் கிடைக்கிறது.

(4) மண்ணின் அமைப்பை உயர்த்துகிறது.

1965-ம் ஆண்டு நவம்பர் மாதக் காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், பி.ஏ., பி.எஸ்ஸி. (ஏஜி.), ரா. சந்தானகிருஷ்ணன், எம்.எஸ்ஸி. (ஏஜி.),
விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோவை—3.)

இம்மாதத்தின் முதல் பதிமூன்று தினங்களில் தமிழகத்தில் பொதுவாக ஆங்காங்கு மழையும் சில தினங்களில் சிற்சில இடங்களிலும் மழை பெய்தது. ஆனால் 6-ம், 10-ம் தேதிகளில் மட்டும் பரவலாக மழையிருந்தது. அடுத்த இரண்டு தினங்களுக்கு வானிலை வரண்டிருந்தது. 16-ம் தேதியிலிருந்து ஐந்து நாட்களுக்கு ஆங்காங்கு மழை பெய்தது. ஆனால் 19-ந் தேதியன்று சிற்சில இடங்களில் மழையிருந்தது. 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதியன்று வானிலை வரண்டிருந்தது. 22,23-ம் தேதிகளில் தமிழகத்தில் சிற்சில இடங்களிலும் மழைபெய்தது. 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம் தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு பரவலாக மழையிருந்தது. 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் தேதியன்று சிற்சில இடங்களிலும் 1965-ம் ஆண்டு நவமபர் மாதம் 28-ம் தேதியன்று ஆங்காங்கும் மழைபெய்தது. இம்மாதத்தின் கடைசி இரண்டு தினங்களில் பரவலாக தமிழகத்தில் மழை பெய்தது.

இம்மாதத்தில் இரவு வெப்பநிலையில் பெருத்த மாற்றங்கள் எதுவும் இல்லை.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மாதம் மிதமாக மழையிருந்தது. வளரும் நெற்பயிற்களுக்கு திருவள்ளூர் பகுதியில் பெய்த மழை உதவிற்று. ஆனால் கதிர் விட்டிருக்கும் பருவத்தில் இருந்த நெற்பயிர்கள் பெய்த மழையால் சாய்ந்துவிட்டன. ஆகையால் அறுவடை செய்ய முடியவில்லை. நெற்பயிரில் குறுத்துப் பூச்சிகளும், திரிப்சும் மிதமாக காணப்பட்டன. திரூர்பகுதியில் பெய்த நல்ல மழையால் வளரும் நெற்பயிர்கள் பயனடைந்தன. தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் போதிய மழையிருந்தது. குடியாத்தப் பகுதியில் பெய்த சிறிதளவு மழை வளரும் நெல், கரும்புப் பயிர்களுக்கு மிகவும் பயன்பட்டது. பாலூர் பகுதியில் நல்ல மழையிருந்தது. இம்மாத முதலில் இருந்த வரட்சி வானிலை காய்கறி விதைகள் உலர்வதற்கு பயன்பட்டது. வளரும் பயிர்களான நெல், கரும்பு, சோளம் இவற்றிற்கு மழை உதவிற்று. திண்டிவனம் பகுதியில் பெய்த சிறிதளவு மழை நிலக்கடலைப்பயிர் அறுவடை செய்யவும், எள் நடுவதற்கு நிலங்கள் தயாரிக்கவும் பயன்பட்டது. நிலக்கடலையில் சிறிதளவு சுருள் பூச்சியும், டிக்கா இலைப்புள்ளி நோயும், ஆமணக்கில் காய்துளைப்பான்களும் காணப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் போதிய மழையிருந்தது. இம்மாத இறுதியில் பெய்த மழை வளரும் நெற்பயிர், துவரை, காய்கறிப்பயிர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது. நெற்பயிரில் குறுத்துப்பூச்சிகளும், மாவுபூச்சிகளும், தத்துப்பூச்சிகளும் காணப்பட்டன. ஆடுதுறை பகுதியில் பெய்த மழை வளரும் சம்பா, தாளடி நெற்பயிர்களுக்கு மிகவும் உதவியாயிருந்தது. நெற்பயிரில் குருத்துப் பூச்சிகளும், இலைப்புள்ளி நோயும் காணப்பட்டன. பட்டுக்கோட்டை பகுதியில் பெய்த சிறிதளவு மழை கோ-25 நெற்பயிருக்கும் சோளப் பயிருக்கும் உதவிற்று. நெற்பயிரில் இப்பகுதியில் இலைப்புள்ளிநோய் காணப்பட்டன. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் மழை மிதமாக இருந்தது. கோவில்பட்டி வட்டாரத்தில் வளரும் சோளம், ராகி, பருத்தி, கம்பு, தினை முதலிய பயிர்கள் மழையால் பயனடைந்தன. ராகியில் குறுத்துப் பூச்சியும் கொள்ளை நோயும், பருத்தியில் அசுக்களும் காய் துளைப்பான்களும், சோளத்தில் குருத்துப் பூச்சிகளும் காணப்பட்டன. சங்கரன்கோவில் வட்டாரத்தில் பெய்த மழை வளரும் நெல், பருத்தி, மிளகாய் பயிர்களுக்கு உதவிற்று. மற்றும் நெல் நாற்று நடுவதற்கும் இம்மழை உதவியது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் இம்மாதத்தின் இறுதியில் நல்ல மழையிருந்தது. ராமநாதபுரம் வட்டாரத்தில் பெய்த மழை வளரும் நெல், சோளம், ராகி, கம்பு முதலிய பயிர்களுக்கு உதவியாயிருந்தது. நீர் நிலங்கள் பெய்த மழையால் நிரம்பியிருந்ததால் நெற்பயிர் நாற்றங்காலிலிருந்து எடுத்து நடப்பட்டது. சாத்தூர் வட்டாரத்தில் பெய்த சிறிதளவு மழை, நெற்பயிர் நடவுக்கு பயன்பட்டது. மழையின்மையால் வாடியிருந்த நிலக்கடலை மற்றும் மானாவாரி பயிர்களுக்கு இம்மழை மிகவும் உதவியது. கன்னியாகுமரி மாவட்டத்தில் இம்மாதத்தின் இறுதியில் நல்ல மழையிருந்தது. இம்மழை மாமரங்களுக்கும் சப்போட்டா, கொய்யா முதலிய பழவகைகளுக்கும் துளிர்விட உதவியாயிருந்தது. நாகர்கோயில் வட்டாரத்தில் நல்ல மழையிருந்தது. வளரும் நெற்பயிர்கள் பயனடைந்தன. இங்கு நெற்பயிரில் தத்துப்பூச்சிகள் காணப்பட்டன.

கோயமுத்தூர் மாவட்டத்தில் இம்மாதத்தில் சுமாரான மழையிருந்தது. ஈரோடு வட்டாரத்தில் பெய்த சிறிதளவு மழை பருத்தி நடவுக்கு பயன்பட்டது. மற்றும் டிசம்பரில் அறுவடையாகும் நிலக்கடலைக்கும் இம்மழை உதவியது. ஆளியார் நகர் பருத்தியில் போதிய மழையில்லை. இம்மாத இறுதியில் பெய்த சிறிதளவு மழை வளரும் பருத்தி, நிலக்கடலை மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு உதவிற்று. பருத்தியில் தத்துப்பூச்சிகளும் அசுவுணியும், நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோயும், சோளத்தில் கதிர்வண்டுகளும் காணப்பட்டன. சேலம் மாவட்டத்தில் மழையளவு போதியதாக இல்லை. பெய்த சிறிதளவு மழை வளரும் நெல், கரும்பு,

சோளம் பயிர்களுக்கு மிதமாயிருந்தது. மற்றும் நிலக் கடலைப்பயிர் அறுவடை செய்யவும் இம்மழை உதவியது சோளப் பயிரில் மிதமாக பேன் இருந்தது. தர்மபுரி மாவட்டததில் மழை மிதமாக இருந்தது. இங்கு பெய்த சிறிதளவு மழை பருத்தி நடவு முடிப்பதற்கு உதவிற்று. நிலக்கடலை அறுவடை முடிந்து காய வைப்பதற்கு இம்மழை தடங்கலாயிருந்தது. ஹோசூர் பகுதியில் மழையின்மையால் மானாவாரி பயிர்கள், முக்கியமாக ராகி, மகசூல் மிகவும் குறைந்தது. நெற்பயிரில தத்துப் பூச்சிகளும், திரிப்சும், குருத்துப்பூச்சிகளும் இப்பகுதியில் காணப்பட்டன.

நீலகிரி மாவட்டத்தில் இம்மாதம் போதிய மழையில்லை. உதக மண்டலம் வட்டாரத்தில் பெய்த சிறிதளவு மழை வளரும் காய்கறிப்பயிர்களுக்கு உதவியாய் இருந்தது. இரண்டாவது உருளைக்கிழங்கு பயிர் சில இடங்களில் அறுவடைக்கு வந்தது. நஞ்சநாடு பகுதியில் இம்மாத இறுதியில் பெய்த சிறிதளவு மழை குளிர்காலப் பயிர்கள் நடுவதற்கான வேலைகள் தொடங்க உதவியது. குன்னூர் பகுதியில் மழையளவு மிதமாயிருந்தது. வளரும் பயிர்கள் இதனால் பயனுற்றன.

இம்மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும் பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு :—

குறிப்பிடத்தக்க மழை அளவுகள்
(அங்குலத்தில்)

வரிசை எண்.	தேதி.	இடத்தின் பெயர்.	மழை யளவு.
1	10–11–65	பாம்பன்	4·65
2	10–11–65	கடலூர்	3·90
3	19–11–65	நாகப்பட்டிணம்	3·39
4	23–11–65	குன்னூர்	3·95

கரும்பு விளைச்சல் போட்டி

1964–65-ல் முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலைப் பகுதியில் நடத்தப்பட்ட முக்கிய பட்டத்துக்கான கரும்பு விளைச்சல் போட்டியில் கீழ்க்கண்டவர்கள் வெற்றிபெற்றுள்ளனர்:—

பெயர்.	பயிர்செய்த கிராமம்.	கரும்பு ரகம்.	ஏக்கர் விளைச்சல் டன்-கிலோ.
1. ஆலைப்பகுதி—			
திரு R. B. முத்துராம ரெட்டியார், ராதாபுரம், விழுப்புரம் வட்டம்.	ராதாபுரம்	கோ. 658	88-976
2. விழுப்புரம் வட்டம்—			
திரு R. வைத்யநாதன், கெடார், விழுப்புரம் வட்டம்.	கெடார்,	கோ. 658	84-546

பிராந்திய மழையளவுகள் (அங்குலத்தில்)

வரிசை எண்.	பிராந்தியத்தின் பெயர்.	நவம்பர் மாத மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு
1	வட பிராந்தியம்	8·7	—1·5	குறைவு
2	கீழ்கரைப் பிராந்தியம்	7·2	—5·1	மிகக் குறைவு
3	மத்திய பிராந்தியம்	2·4	—3·0	ஷை
4	தென் பிராந்தியம்	7·2௦	—0·7	சற்று குறைவு
5	மலைப் பிராந்தியம்	5·2	—3·9	மிகக் குறைவு

1965-ம் ஆண்டு நவம்பர் மாதக் காலநிலை அறிக்கை

மழை அளவு (அங்குலத்தில்)

இடத்தின் பெயர். (1)	இம்மாத மழை யளவு. (2)	சராசரியிலிருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழை யளவு. (4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்) ...	15·0	+1·0	36·0
திரூர்குப்பம் *	11·6	—1·0	34·3
வேலூர்	6·0	—1·7	25·5
குடியாத்தம் *	2·2	—4·1	20·2
கீழ்கரைப் பிராந்தியம்			
பாலூர் *	7·2	—4·7	36·6
திண்டிவனம் *	3·4	—4·9	30 6
கடலூர்	11 7	—3·8	33·4
நாகப்பட்டிணம்	9·2	—8·4	27·2
ஆடுதுறை *	7·2	—5·1	29·7
பட்டுக்கோட்டை * ..	4·5	—3·6	25·5
மத்திய பிராந்தியம்			
சேலம்	1·6	—2·2	24·1
சேலம் *	2·5	—1·9	28·1
கோயமுத்தூர் *	3·2	—2·8	16·8
கோயமுத்தூர்	2·8	—1·2	14·5
ஆளியார் நகர் *	1·9	—4·9	14·9
திருச்சிராப்பள்ளி	2·3	—4·7	27·6
தென் பிராந்தியம்			
மதுரை	2·2	—3·5	24·8
பாம்பன்	11·9	+0·2	26·7
கோவில்பட்டி *	3.6	—3·8	22·4
பாளையங்கோட்டை	6·8	—0·7	26·0
அம்பாசமுத்திரம் *	9 2	+1·0	23.0
நாகர்கோயில் *	7·9	+0·5	34·7
கன்னியாகுமரி *	8·7	+1·8	23·0
மலை பிராந்தியம்			
கோடைக்கானல்	3·2	—7·0	40·4
கூனூர் *	11·9	—2·5	39·9
உதகமண்டலம் *	2·9	—3·1	31·4
நஞ்சநாடு * —	2·6	—2·9	34·6

குறிப்பு.—*சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, விவசாயத் துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



1—12—65 அன்று சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற கண்காட்சியில் காய்கறி பகுதியை உணவு அமைச்சர் திரு. V. ராமையா, சுகாதார அமைச்சர் திருமதி. ஜோதி வெங்கடாசலம் ஆகியோர் பார்வையிட்ட போது திரு. ரங்கசாமி, பிரத்யேக மாவட்ட விவசாய அலுவலர் (காய்கறி) அவர்கள் விளக்கம் தருகிறார்.



22—12—65 அன்று திரூர்குப்பத்தில் விவசாயிகள் தின விழாவும், 'டன்னேஜ் கிளப்' துவக்க விழாவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் உரையாற்றுகிறார்.



22—12—65 அன்று திரூர்குப்பத்தில் நடைபெற்ற விவசாயிகள் தினவிழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயல் விளக்கக் காட்சிகளில் 'குபேட்டா பவர் டில்லர்' வேலை செய்வதை விவசாயிகள் பார்வையிடுகின்றனர்.

Registered No. M-4646

©
தமிழ்நாடு அரசாங்கம்
1966

தமிழ்நாடு மின்சார குழு.

வேண்டுகோள்

குந்தாவிலிருந்து மதுரைக்குக் கொண்டு செல்லப்படும் 2,30,000 ஒல்ட், 1.10,000 ஒல்ட் மின் அழுத்தமுள்ள மின்சாரக் கம்பிகள் உயர்ந்த டவர் லைன்கள் மூலம் காரமடை, பெரியநாய்க்கன் பாளையம், துடியலூர், குனியமுத்தூர், பேரூர், நெகமம், உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம், மதுரை முதலிய வட்டாரங்களைக் கடந்து செல்லுகின்றன. அவ்வாறு செல்லும் டவர் லைன்களின் கீழும் அவைகளுக்கருகிலும் கரும்பு சாகுபடி செய்திருப்பது, டவர் லைனுக்கும் பூமிக்கும் இடையே இருக்க வேண்டிய பாதுகாப்பு இடைவெளி குறைந்து, அந்த இடங்களில் வளரும் பயிரினங்களுக்கும் அங்குள்ள வயல்களில் வேலை செய்யும் ஆட்களுக்கும் விபத்து நேரிட ஏதுவாகிறது.

எனவே மேற்படி டவர் லைன்கள் செல்லும் பகுதிகளில் டவர் லைன்களுக்குக் கீழோ அல்லது அருகிலோ 15 அடி உயரத்திற்கு வளரக்கூடிய கரும்போ அல்லது வேறு பயிர்களோ சாகுபடி செய்யக் கூடாது என்று ஆங்காங்குள்ள உழவர் பெருங்குடி மக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும் பொது மக்களுக்கும் அவர்களுடைய பயிரினங்களுக்கும் பாதுகாப்பளிக்கும் பொருட்டு அந்த இடங்களில் குறைந்த உயரமே வளரக்கூடிய கரும்பு அல்லது ஏனைய உணவு தானியங்களைப் பயிரிடுதல் வேண்டும் என்று மேற்கண்ட பகுதிகளில் உள்ள உழவர் பெருமக்களை வேண்டி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ஒப்பம்) **எஸ். முகமுது அலி,**
மேற்பார்வை மின்பொறியாளர்,
பைக்கார மின்னியக்கத் திட்டம்,
கோயமுத்தூர்.